Find us on facebook/tamilmirror | Follow us on twitter/tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ்Mirror

TUESDAY, DECEMBER 28, 2021

செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 28, 2021 | ஒளி: 07 கதிர்: 190 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



மன்னார் பிரதேச சபையின்

## பட்ஜெட் தோற்கடிப்பு

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், ஒரு மேலதிக வாக்குக்கால், நேற்று (27) தோற்கடிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட கூட்டமானது, நேற்று (27) காலை 10.30 மணியளவில், மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம். முஹாஜிர் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ச்சி P2

அடுப்புகளில் எரியாது மக்களின் மனங்களில்

# நெருப்பு எரிகிறது



■ நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்த நபரொருவர் தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்

■ மத்திய வங்கி ஆளுநரே டொலர் மாபியாவின் வஞ்சகர். இந்நாட்டு மக்களின் வாழ்க்கையுடன் விளையாடி கொண்டிருக்கின்றார்

நாட்டு மக்களின் வீடுகளிலுள்ள அடுப்புகளில் நெருப்பு எரிவதற்குப் பதிலாக, அவர்களின் மனதிலேயே நெரிப்பு எரிகிறது எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, எரிபொருட்களின் விலைகளை அதிகரித்து, சிறந்த நத்தார் பரிசை வழங்கிய அரசாங்கம், கையிருப்பிலுள்ள டொலரைக் கடனாகச் செலுத்தி, புத்தாண்டு பரிசையும் வழங்கவுள்ளது என்றார்.

மக்கள் குறைகளைக் கேட்டறியும் 'மனிதாபிமான சுற்றுலா'வின் இரண்டாவது விஜயத்தை அம்பலாந்தொட்டையில் நேற்று (27) ஆரம்பித்து, மக்களைச் சந்தித்துப் பேசி குறைகளை கேட்டறிந்தது கொண்டார். அத்துடன், 'குடும்ப ஆட்சியே நாட்டின் அழிவு' எனும் துண்டுப் பிரசுரத்தையும் வழங்கினார்.

மத்திய வங்கி ஆளுநரே டொலர் மாபியாவின் வஞ்சகர் எனக் கூறிய எதிர்க்கட்சி தலைவர், அவர் இந்நாட்டு மக்களினதும் ஏற்றுமதியாளர்களினதும் வாழ்க்கையுடன் விளையாடி கொண்டிருக்கின்றார் என்றார்.

தொடர்ச்சி P2

## பி.பீ ஜயசுந்தர இராஜினாமா



ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பி.பீ ஜயசுந்தர இராஜினாமா செய்வதற்கான கடிதத்தை கையளித்துள்ளார். அந்தக் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பி.பீ ஜயசுந்தரவை பதவி விலகுமாறு, அமைச்சரவையில் கடுமையான எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன. அதன்பின்னரே, தனது பதவியை இராஜினாமா செய்வதற்கு அவர் தீர்மானித்துள்ளார் என அறியமுடிகின்றது.

தொடர்ச்சி P2

## டெஸ்மண்ட் டுட்டுவின் மறைவுக்கு த.தே.கூ இரங்கல்



நித்திய இளைப்பாறிய பேராயர் டெஸ்மண்ட் டுட்டுவின் மறைவிற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இரங்கல் தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவில் இனவாதத்திற்கு எதிராகவும் உலகில் அனைத்து அநீதிகளுக்கு எதிராகவும் போராடியவர் மட்டுமல்லாது சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமாகவும் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு அயராது உழைத்தவர் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## போலிகள் உலாவுகின்றன; பொதுமக்களே, கவனம்!



நாடு முழுவதும் போலி நாணயத்தாள்கள் அதிகளவில் புழக்கத்தில் உள்ளதால், பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு இலங்கை மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளது.

சந்தேகத்துக்கு இடமான நாணயத்தாள் ஒன்று காணப்பட்டால் பாதுகாப்புச் சின்னம் தொடர்பில் ஆராய்ந்த பின்னர் அதைத் தம்வசம் வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

புது வருட முற்பணத்தை

## ரூ.10,000 ஆக அதிகரிக்கவும்

அஸ்லம் எஸ். மௌலானா



அரசாங்க ஊழியர்களுக்கான புதுவருட விசேட முற்பண தொகையை, தற்போதைய பொருளாதார நிலையை கருத்தில்கொண்டு 10,000 ரூபாயாக அதிகரிக்குமாறு, இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி, நிதியமைச்சு மற்றும் பொது நிர்வாக அமைச்சு என்பவற்றின் செயலாளர்களுக்கு மேற்படி சங்கம் அவசர மகஜர்களை அனுப்பி வைத்திருப்பதாக, அதன் செயலாளர் ஏ.எல்.எம்.முக்தார், நேற்று (27) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## கோவில் விக்கிரகங்கள் குறித்து விசாரணை

யாழ்ப்பாணத்தில் இருந்து கோவில் விக்கிரகங்களைத் திருடி விற்கும் கும்பல்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளைத் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற விசேட பொலிஸ் குழு, கொழும்பு, ஆமர் வீதியிலுள்ள வர்த்தகரிடம் இருந்து கோவில் விக்கிரகங்களை மீட்டுள்ளது.

## இரசாயன உர இறக்குமதிக்கு மேலும் 7 நிறுவனங்களுக்கு அனுமதி



இரசாயன உர இறக்குமதிக்காக அனுமதி கோரியுள்ள மேலும் 7 நிறுவனங்களுக்கு உர இறக்குமதிக்கான அனுமதியை தேசிய உர செயலகம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யூரியா மற்றும் சின்க் சல்பேட் இறக்குமதிக்காக இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளதென தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளர் சந்தன லொக்குஹேவா தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்பட்டும் இயற்கை உரங்களில் எவ்வித பயனையும் பெறாமல், அதனை பகிரங்கமாக வீணாக்குபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்த எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

ரயில் பேச்சு தோல்வி: தொடர்கிறது வேலைநிறுத்தம்

## கோதுமை, எரிபொருள், சீமெந்து, ரயில்களில் ஏற்ற மறுப்பு





பொது முகாமையாளருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளது. ஆதலால், தமது தொழிற்சங்க நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளதாக ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம்

தொடர்ச்சி P2

பணி அழுத்தம் இருந்தாலும்

## யாரையும் கொல்ல முடியாது



பணி அழுத்தத்தின் கீழ், தன்னிச்சையாகக் கொலை செய்ய எவருக்கும் உரிமை இல்லை என, பொது பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் (ஓய்வு) சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை T-56 துப்பாக்கியால் பொலிஸ் சார்ஜன்ட் சுட்டுக் கொன்ற சம்பவம் தொடர்பில் 'லங்காதீப' பத்திரிக்கை எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

சந்தேகத்துக்குரிய பொலிஸ் சார்ஜன்ட் கோரியவாறு, விடுமுறை கிடைக்காததால் கடும் அழுத்தத்தின் பேரில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக, அவரது தாயார் கருத்து வெளியிட்டிருந்தார்.

தொடர்ச்சி P2

வெட்டுக்காயங்களுடன்

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

றொசேரியன் லெம்பெட்



மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, ஓலைத்தொடுவாய் பகுதியில், வெட்டுக்காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் (26) மாலை, மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த, 3 பிள்ளைகளின் தந்தையான அப்துல் ரசாக் முஹமது ஹவ்ஸ் (வயது-51) என்பவர் ஆவார்.

குறித்த நபர், நேற்று முன்தினம் (26) காலை 11.30 மணியளவில் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இவ்வாறு மீட்கப்பட்ட சடலத்தில் பலத்த வெட்டுக் காயங்கள் காணப்பட்டன.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கூறிக்கொண்ட இருவர், மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

துப்பாக்கி சூட்டில்

## பலியானவரின் உடல் நல்லடக்கம்

ஏ.எல்.எம்.ஷினாஸ், வி.ரி.சகாதேவராஜா



திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் சார்ஜென்ட் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வெள்ளிக்கிழமை (24) உயிரிழந்த பாண்டிருப்பைச் சேர்ந்த அழகரெத்தினம் நவீனனின் பூதவுடல் நேற்று முன்தினம் இரவு (26) உறவினர்களிடத்தில் கையளிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

மரணித்த

## 4 பொலிஸாருக்கும் பதவி உயர்வு

எம்.எஸ்.எம்.ஹனீபா



திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் வெள்ளிக்கிழமை இரவு (24) பொலிஸ் சார்ஜென்ட் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்ட 4 பொலிஸ் அதிகாரிகளின் அடுத்த தரத்துக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நெருப்பு எரிகிறது

நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்த நபரொருவர் தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், மொட்டு பொருளாதார சீரழிவின் பிரதான சூத்திரதாரி அவர் என்றும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்த குற்றத்தின் பொறுப்பில் இருந்து அவரால் தப்பிக்க முடியாது. நாட்டுக்கு இந்தளவு சாபத்தை கொண்டு வந்த அமைச்சர்களுக்கு, மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

# பட்ஜெட் தோற்கடிப்பு

தவிசாளரின் தலைமை உரையைத் தொடர்ந்து, பிரதேச சபையின் செயலாளரால் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்ட அறிக்கையை வாசிக்க முற்பட்ட போது, இந்த வரவு - செலவுத் திட்ட அறிக்கையை தாங்கள் எதிர்ப்பதாக, மன்னார் பிரதேச சபையின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர், பிரேரணை ஒன்றை சபையில் கொண்டு வந்தார்.

இதை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் முன்மொழிந்து வழிமொழிந்தனர்.

இதேவேளை, இந்த வரவு - செலவுத் திட்டத்தை தாங்கள் ஆதரிப்பதாக, தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் முன்மொழிய, அதை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் வழிமொழிந்தார்.

இதனைத் தொடர்ந்து, சபையின் தவிசாளரால் வரவு - செலவுத் திட்டம் பகிரங்க வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதன்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் 7 உறுப்பினர்களும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த 2 உறுப்பினர்களும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த தலா ஓர் உறுப்பினர்களுமாக மொத்தம் 11 உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

**“ கூட்டமைப்பின் 7 உறுப்பினர்களும், முஸ்லிம் காங்கிரஸ் 2 உறுப்பினர்களும், சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த தலா ஓர் உறுப்பினருமாக 11 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்**

ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 7 உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் தலா ஒருவர் வீதம் ஆதரவாக 10 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

# ‘போலிகள் உலாவுகின்றன; பொதுமக்களே, கவனம்!

நாணயத்தாளை கொண்டு வந்தவர், அவரது தோற்றம், வாகனத்தில் வந்தால் வாகனத்தின் விவரம், பணத்தாளின் மதிப்பு, வரிசை எண் ஆகியவற்றைப் பதிவு செய்து அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது குற்றப் புலனாய்வு துறையின் போலி நாணயப் பிரிவினரின் 0112422176 மற்றும் 0112326670 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து தெரிவிக்க வேண்டும்.

போலி நாணயத்தாள்களை வைத்திருந்தமை, பயன்படுத்துதல் அல்லது அச்சடித்தல் போன்ற குற்றங்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

**“ போலி நாணயத்தாள்களை வைத்திருந்தமை, பயன்படுத்துதல், அச்சடித்தல் போன்ற குற்றங்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது**

இதேவேளை, நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமை காரணமாக போலி நாணயத்தாள்களை அச்சடித்து விநியோகிப்பது தொடர்பில் உன்னிப்பாக அவதானிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு பொலிஸ் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

# ரூ.10,000 ஆக அதிகரிக்கவும்

“எனவே, இத்தொகையை 10,000 ரூபாய் வரை அதிகரிப்பதன் மூலமே தமது பிள்ளைகளின் தேவைகளை அரச சேவை ஊழியர்கள் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்பதை குறித்த அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளோம்” என்றார்.

# கோதுமை, எரிபொருள், சீமெந்து, ரயில்களில் ஏற்ற மறுப்பு

ரயில் சமிஞ்சை கட்டமைப்புகளை புனரமைக்காமை, சேதமடைந்த ரயில் பெட்டிகளை போக்குவரத்திற்கு பயன்படுத்தி பயணிகளை உயிராபத்துக்கு உட்படுத்துவதை எதிர்த்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், ரயில்வே பொது முகாமையாளருடன் இன்று (27) பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அந்தப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்துவிட்டது. ஆதலால், பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் வரையிலும் தமது போராட்டம் தொடருமென ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன குறிப்பிட்டார்.

இதேவேளை, ரயில் டிக்கெட்டுக்கள் வழங்காமையால், கடந்த இரண்டு நாள்களில் மட்டும், ஒரு கோடி ரூபாய்க்கு மேல், ரயில்வே திணைக்களத்துக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**“ ரயில் சமிஞ்சை கட்டமைப்புகளை புனரமைக்காமை, சேதமடைந்த ரயில் பெட்டிகளை போக்குவரத்திற்கு பயன்படுத்தி பயணிகளை உயிராபத்துக்கு உட்படுத்துவதை எதிர்த்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்**

முன்னதாக ரயில் பயணச்சீட்டு வழங்காதது மற்றும் பொதிகளை ஏற்றுவது, கொண்டு செல்வது போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அதற்கு மேலதிகமாக, சீமெந்து, மா, எரிபொருள் போக்குவரத்திலிருந்து விலகுவதற்கும் ரயில் நிலைய அதிபர்கள் தீர்மானித்துள்ளனர்.

# ஜயசுந்தரவின் இராஜினாமாவை

அவர், 2022 ஆம் ஆண்டு முதல்வாரத்தில் இராஜினாமா செய்துகொள்வார் என அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமைச்சரவைக் கூட்டத்தின் போது, அமைச்சர் சமல் ராஜபக்ஷவும், ஜயசுந்தரவை கடுமையாகத் தாக்கி பேசியுள்ளார் என்றும் அறியமுடிகின்றது.

அவரது வெற்றிடத்துக்கு தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளர் காமினி செனரத் அல்லது நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சின் செயலாளர் அநுர திஸாநாயக்க நியமிக்கப்படக்கூடுமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இரசாயன உர இறக்குமதிக்கு மேலும் 7 நிறுவனங்களுக்கு அனுமதி

சில பிரதேசங்களில் விவசாயிகள் இயற்கை உரம் அடங்கிய போத்தல்களை நிலத்தில் எறிந்து வீணடிக்கின்றமையானது, அரச சொத்துகளை முறைகேடாகப் பயன்படுத்துவதற்கு ஒப்பான விடயம் என்றார்.

உரிய தரத்துடன் திரவ உரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், சேதன விவசாயத் திட்டமான அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை சீர்குலைக்கும் நோக்கில் சிலரால் ஒருங்கமைத்து இந்த நாசகார செயல் முன்னெடுக்கப்படுகிறது என்றார்.

அதேப்போல் தரத்துடனான திரவ உரம் தரமற்றது என எவராவது குற்றஞ் சுமத்துவார்களாயின் அதனை சாட்சியுடன் நிருபிக்க வேண்டும் என்றார்.

தொழிநுட்ப குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரசாயன கூடங்களில் பரிசோதிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ள இந்த திரவ உரத்தை முதலில் பயன்படுத்தி பார்ப்பது விவசாயிகளின் கடமை எனத் தெரிவித்த அவர், இதற்காக அரசாங்கம் பாரிய நிதியை செலவு செய்துள்ளது என்றார்.

# ‘யாரையும் கொல்ல முடியாது’

இந்த கருத்து தொடர்பில் விசாரணை நடத்தியதில் குறித்த சார்ஜன்ட் அவ்வாறான விடுமுறையை கோரவில்லை என தெரியவந்துள்ளதாக அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

பணியில் எவ்வளவு அழுத்தங்கள் இருந்தாலும், யாரையும் கொல்லும் உரிமை யாருக்கும் இல்லை என்றும், இந்த சம்பவத்தில் பொலிஸார் விலைமதிப்பற்ற நான்கு உயிர்களை இழந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இச்சம்பவத்தில் ஓ.ஐ.சி.யும் காயமடைந்துள்ளதாகவும், அவர் குணமடைந்த பின்னர் மேலதிக விவரங்கள் தெரியவரும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, இச்சம்பவத்தால் தாம் மிகுந்த மனவேதனை அடைவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# டெஸ்மண்ட் டுட்டுவின் மறைவுக்கு த.தே.கூ இரங்கல்

உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவின் தலைவராக பணியாற்றிய அவர் நீதியும் கருணையும் ஒன்றுக்கொன்று முரணானவையல்ல, பிரிக்கமுடியாத முழுமையின் இரு அங்கங்கள் என்பதை காண்பித்தார் எனவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கு ஆதரவாக குரல் கொடுத்து ‘எல்டர்ஸ்’ குழு வெளியிட்ட அறிக்கைகளை நன்றியோடு நினைவு கூருவதாகவும் தமிழ் தேசிய கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

**“ நீதியும் கருணையும் ஒன்றுக்கொன்று முரணானவையல்ல, பிரிக்கமுடியாத முழுமையின் இரு அங்கங்கள் என்பதையும் மன்னிப்பு இன்றி எதிர்காலம் இல்லை என்பதையும் டுட்டு வாழ்ந்து காண்பித்தார்**

‘மன்னிப்பு இன்றி எதிர்காலம் இல்லை’ என்பதை பேராயர் டெஸ்மண்ட் டுட்டு வாழ்ந்து காண்பித்ததாகவும் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் பெயர் குறிப்பிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# திருமண விவகாரம் திஸ்ஸ அதிருப்தி

வெளிநாட்டவர்களை திருமணம் செய்துகொள்ள எதிர்பார்த்துள்ள இலங்கையர்கள், இலங்கை பாதுகாப்பு அமைச்சின் விசேட அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென, அரசாங்கம் வெளியிட்டுள்ள சுற்றுநிருபம் தொடர்பில் தமது அதிருப்தியை வெளிப்படுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

திருமணம் என்பது மனிதனின் அடிப்படை உரிமை என்ற நிலையில், அரசாங்கம் வெளியிட்டுள்ள இந்த சுற்றுநிருபமானது மனிதனின் அடிப்படை உரிமையை மீறும் செயலென்றும் இந்த அடிப்படை உரிமைக்கும் அரசாங்கம் வேலி அமைக்கிறது என்றார்.

பதிவாளர் நாயகம் வெளியிட்டுள்ள புதிய சுற்றுநிருபமானது, பொருளாதார பிரச்சினையையோ, மக்கள் பிரச்சினையையோ நிதி பிரச்சினையையோ தீர்ப்பதற்கான சுற்றுநிருபம் அல்லவென்றும் அது ஒரு புதுமையான சுற்றுநிருபம் என்றார்.

மேலும் அரசாங்கத்தின் தோல்வி வெளிப்படும் போது, அதற்காக செயலாளர்களை பதவி விலகுமாறு கோரி விடுபட அரசாங்கத்துக்கு முடியாது.

செயலாளர்களை யார் தெரிவு செய்தது ? என கேள்வி எழுப்பிய அவர், தெரிவு செய்யப்பட்டவர்கள் தவறெனில் தெரிவு செய்த நபர்களும் தவறானவர்களே என்றார்.

தகுதியற்ற நபர்களை தெரிவு செய்து, பதவி நியமனங்கள் வழங்கியதன் மூலம் பாரிய பொருளாதார சிக்கல்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளது என்றார்.

நாட்டு மக்களுக்கு கூறினர் வியத்மக உடாக நாட்டை நிர்வகிப்பதாக எங்கே இப்போது அந்த வியத்மக என கேள்வி எழுப்பினார்.

ஆனால் நாட்டில் நடக்கும் நிர்வாக பிரச்சினைகளுக்கு அமைச்சின் செயலாளர்கள் தான் பலிகடா ஆகிறார்கள் என தெரிவித்த அவர், விவசாய அமைச்சின் செயலாளருக்கும் இந்த நிலை தான் ஏற்பட்டது என்றார்.

எனவே இவ்வாறு அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு அரசாங்கம் பரிசுத்தமாக மாற முடியாது.ஏனெனில் மக்கள் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்குமே வாக்களித்துள்ளனர்.

# பலியாகியவரின் உடல் நல்லடக்கம்

இதனையடுத்து பொலிஸ் மரியாதையுடன் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு பாண்டிருப்பு பொது மயானத்தில் சடலம் நேற்று (27) நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதில் அரசியல் பிரமுகர்கள், புத்திஜீவிகள், பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் பிரதேச பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தத் துப்பாக்கிச்சூடுச் சம்பவத்தில் ஒலுவிலைச் சேர்ந்த கே.எல்.எம். அப்துல் காதர், பிபிலையைச் சேர்ந்த டி.பி. கே.பி. குணசேகர, சியம்பலாண்டுவவைச் சேர்ந்த டி.எம்.டி.எச். புஷ்பகுமார ஆகிய 4 பொலிஸார் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெஹிகம உட்பட இரு பொலிஸார் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

**“ குறித்த 4 பொலிஸ் அதிகாரிகளினதும் வீடுகளுக்கு பொலிஸ் மாஅதிபர் சி.டி. விக்ரமரத்ன நேற்று முன்தினம் (26) விஜயம் செய்ததோடு, அவர்களது குடும்பத்தினருக்கு இலங்கை பொலிஸ் திணைக்களம் சார்பில் தனது அனுதாபங்களைத் தெரிவித்திருந்தார்**

கைதான பொலிஸ் சார்ஜென்ட், ஜனவரி 06ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த 4 பொலிஸ் அதிகாரிகளினதும் வீடுகளுக்கு பொலிஸ் மாஅதிபர் சி.டி. விக்ரமரத்ன நேற்று முன்தினம் (26) விஜயம் செய்ததோடு, அவர்களது குடும்பத்தினருக்கு இலங்கை பொலிஸ் திணைக்களம் சார்பில் தனது அனுதாபங்களைத் தெரிவித்திருந்தார்.

# 4 பொலிஸாருக்கும் பதவி...

இதன்படி, கே.எல்.எம். அப்துல் காதர் சார்ஜென்ட் நிலையிலிருந்து உப பொலிஸ் பரிசோதகராகவும், அழகரெத்தினம் நவீனன் கான்ஸ்டபிள் நிலையிலிருந்து சார்ஜென்ட் ஆகவும், டி.பி. கே.பி. குணசேகர கான்ஸ்டபிள் நிலையிலிருந்து சார்ஜென்ட் ஆகவும், டி.எம்.ரி.எச். புஷ்பகுமார கான்ஸ்டபிள் சாரதி நிலையிலிருந்து சார்ஜென்ட் சாரதி ஆகவும் தரமுயர்த்தப்பட்டுள்ளார்கள்.

# “எனது மனைவியின் கொலைக்கு நீதி வேண்டும்”

மட்டக்களப்பு அரசடி பகுதியில் கடந்த 20 ஆம் திகதி வெட்டிக் கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர், நீதிமன்றத்தில் நேற்று (27) வாக்குமூலமளித்துள்ளார்.

மட்டக்களப்பு நீதவான் ஏ.சி. ரிஷ்வான் முன்னிலையில் இந்த வழக்கு, நேற்று (27) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவன் வாக்குமூலமளித்துள்ளார்.

தனது மனைவியின் கொலைக்கு நீதி வேண்டுமென அவர் நீதவான் முன்னிலையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட, சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் எதிர்வரும் 04 ஆம் திகதி வரை ஏற்கெனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, அரசடி பகுதியில் கடந்த 20 ஆம் திகதி 49 வயதான பெண்ணொருவர் வெட்டி கொலை செய்யப்பட்டதுடன், அவரின் தங்க ஆபரணங்களும் திருடப்பட்டன. அவ்வீட்டின் முன்னாள் வேலைக்காரியும் அவரின் தந்தை ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# சக்குராய் விமானங்கள் பறக்கத் தடை

‘சக்குராய்’ விமான நிறுவனத்துக்குச் சொந்தமான அனைத்து விமான சேவைகளும் உடன் அமலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட்டுள்ளன. இதற்கான தீர்மானம் சிவில் விமான சேவைகள் அதிகார சபையால் நேற்று (27) எடுக்கப்பட்டுள்ளது.

மறுஅறிவித்தல் பிறப்பிக்கப்படும் வரை, இந்த நிறுவனத்திற்கு சொந்தமான அனைத்து விமான சேவைகளும் இரத்து செய்யப்படுகிறது என, விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் டி.வி. ஷானக தெரிவித்தார்.

**“ இந்த விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான இரண்டாவது இலகுரக விமானமும் நேற்று (27) நீர்கொழும்பு பகுதியில் விபத்துக்குள்ளான நிலையிலேயே, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. இந்த விமான நிறுவனத்திற்கு சொந்தமான இலகுரக விமானமொன்று கடந்த 22 ஆம் திகதியன்று பயாகல கடற்கரையோரத்தில் விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது**

இந்த விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான இரண்டாவது இலகுரக விமானமும் நேற்று (27) நீர்கொழும்பு பகுதியில் விபத்துக்குள்ளான நிலையிலேயே, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இந்த விமான நிறுவனத்திற்கு சொந்தமான இலகுரக விமானமொன்று கடந்த 22 ஆம் திகதியன்று பயாகல கடற்கரையோரத்தில் விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது.




# “திருட்டுக் கூட்டணிகளை அமைக்கமாட்டோம்”

அடுத்த வருடத்தில் நாட்டு மக்களுக்கு உண்பதற்கு உணவு கூட கிடைக்காத நிலையொன்று ஏற்படும் எனத் தெரிவிக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா, இதைத் தடுப்பதற்கு அரசாங்கத்திடம் எந்தவிதமான திட்டங்களும் இல்லை என்றார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், அடுத்த வருடம் நாட்டு மக்களுக்கு உணவுக்குக்கூட வழியில்லாத நிலையொன்று ஏற்படப்போவது நன்கு தெரிகிறது. எனினும், இதைத் தடுப்பதற்கு அரசாங்கத்திடம் எந்தவொரு வேலைத்திட்டங்களும் இல்லை.

இதற்கு முன்னர் நாட்டை ஆட்சி செய்தவர்களுடனும், ஆட்சியதிகாரத்தில் உயர் பதவிகளை வகித்தவர்களுடனும் இணைந்து, நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. தேர்தல் காலங்களில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக, திருட்டுக் கூட்டணிகளை அமைத்தும் நாட்டை கட்டியெழுப்ப முடியாது.

அடுத்த வருடம் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு கண்டிப்பாக வரும். இதனால் மின்சாரத் தடைகள் ஏற்படும் எனவும் டில்வின் சில்வா கூறினார்.



## நத்தார் விபத்துகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

கடந்த மூன்று நாள்களில் 588 விபத்துகள் பதிவாகியுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை அறிவித்துள்ளது.

கடந்த வருடம் நத்தார் பண்டிகைக் காலங்களில் ஏற்பட்ட விபத்துகளின் எண்ணிக்கையை விட, இந்த வருடம் 29 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் கொழும்பு தேசிய வைத்தியசாலை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது, நத்தார் பண்டிகைக் காலத்தின் போது, இந்த வருடம் வீதி விபத்துகளின் எண்ணிக்கை 33 சதவீதம் அதிகரித்துள்ளதோடு, வீடுகளில் இடம்பெற்ற விபத்துகளின் எண்ணிக்கையும் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 14 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது, இந்த வருடம் குறிப்பிடத்தக்களவு அதிகளவு விபத்துகள் பதிவாகியுள்ளதாகவும் கொழும்பு தேசிய வைத்தியசாலை அறிவித்துள்ளது.

## குஸ்ஸுடன் பெண்கள் கைது

திக்வெல்ல பிரதேசத்தில் நடைபெற்ற புதுவருட களியாட்ட நிகழ்வுக்கு போதைப்பொருளை எடுத்துச் செல்ல முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் பெண்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவ வெளியேறும் பகுதியில் வைத்து நெடுஞ்சாலையில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மேற்கொண்ட சோதனையின்போதே, இவர்கள் நால்வரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

> அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவ வெளியேறும் பகுதியில் வைத்து நெடுஞ்சாலையில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸாரின் சோதனையின்போதே, நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்

மிரிஹான, களுபோவில, கடுவல, பேராதனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதோடு, இவர்களிடமிருந்து 10 கிராம் குஸ் போதைப்பொருளும் ஒரு கிராம் கொக்கைனும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.





## சந்திப்பு...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை, இலங்கைக்கான துனீசியத் தூதுவர் ஹெயட் டல்பி பிலேல், மரியாதை நிமித்தமாக அண்மையில் (23) பாராளுமன்றத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

### எரிவாயு தட்டுப்பாடுக்கு

## பாதுகாப்பும் ஒரு காரணம்



சமையல் எரிவாயுவின் தரம் தொடர்பில் பரிசோதிக்கும் அதிகாரம், இலங்கை கட்டளைகள் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, சமையல் எரிவாயு சிலிண்டர்களின் தட்டுப்பாட்டுக்கு நுகர்வோரின் பாதுகாப்பும் ஒரு காரணம் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், சமையல் எரிவாயு, கப்பலில் இருந்து இறக்கப்பட்டு, சந்தைகளுக்கு விநியோகிக்கும் வரையில் நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபையினர் அது தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டில் தற்போது சமையலில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நுகர்வோரின் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தப்படுவதும், தட்டுப்பாட்டுக்குக் காரணமாகும்.

சமையல் எரிவாயு தட்டுப்பாடை நிவர்த்தி செய்ய, அந்த நிறுவனங்கள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். எரிவாயுவின் தரம் தொடர்பில் பரிசோதிக்கும் அதிகாரம், இலங்கை கட்டளை நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்கள், விரைவில் வெளியிடப்படும் எனவும் அவர் கூறினார்.

> நாட்டில் தற்போது சமையலில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நுகர்வோரின் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தப்படுவதும், தட்டுப்பாட்டுக்குக் காரணமாகும். எரிவாயுவின் தரம் தொடர்பில் பரிசோதிக்கும் அதிகாரம், இலங்கை கட்டளை நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது

## எம்.பிகளுக்கு குறைந்த சம்பளமே கிடைக்கிறது



பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு குறைந்தளவான சம்பளமே கிடைக்கின்றது எனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார, எம்.பிக்களின் சம்பளத்தை வழங்குவதால் டொலர் பிரச்சினை தீராது எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், “பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மிகக் குறைவான பணமே சம்பளமாகக் கிடைக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்களின் 06 மாத சம்பளத்தை வழங்குவதன் ஊடாக, நாட்டின் டொலர் பிரச்சினையை தீர்க்க முடியாது.

மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை வழங்குவதால் ஏனைய பிரச்சினைகளையும் தீர்க்க முடியாது” என்றார்.

## கிம்புலபிடியவில் விமான விபத்து

### நால்வருக்குக் காயம்

ம.கே.ஜி.கபில

தனியாருக்கு சொந்தமான இலகுரக விமானமொன்று இயந்திர கோளாறு காரணமாக நீர்கொழும்பு, கிம்புலபிடிய பிரதேசத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியது. இதில் காயமடைந்த நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட இந்த விமானம், சிகிரியாவிலிருந்து கொக்கல நோக்கி பயணித்துக் கொண்டிருந்தது. இதன்போதே, இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

> கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இந்த விமானத்தை அவசரமாக தரையிறக்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து கட்டுநாயக்க விமான நிலையம் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த விமானம், கிம்புலபிடிய பகுதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது

இதனால், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இந்த விமானத்தை அவசரமாக தரையிறக்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து கட்டுநாயக்க விமான நிலையம் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த விமானம், கிம்புலபிடிய பகுதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதேவேளை இந்த விமானத்தில் இருந்த விமானிகள் இருவரும், விமானத்தில் பயணித்த லெபனான் நாட்டைச் சேர்ந்த இருவரும் காயமடைந்த நிலையில், நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



## பல்கலைக்கழக நகர அபிவிருத்தி திட்டம் ஆரம்பித்து வைப்பு

அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் அனுசரணையில் செயற்படுத்தப்படும் இலங்கை வடமேல் பல்கலைக்கழக நகர அபிவிருத்தி திட்டத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்துள்ளார்.

குளியாப்பிட்டி வடமேல் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று (27) நடைபெற்ற நிகழ்வில், அலரி மாளிகையிலிருந்து இணைய தொழில்நுட்பம் ஊடாகக் கலந்து கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் முகமாக நினைவு பலகையை திறந்து வைத்தார்.

இத்திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவு 28 மில்லியன் அமெரிக்க டொலராகும். அந்நிதியை சலுகைக் கடன் அடிப்படையில் பெற்றுக் கொடுப்பதற்கு அபிவிருத்திக்கான சவுதி நிதியத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

வடமேல் பல்கலைக்கழகத்தின் குளியாப்பிட்டிய, மாகந்துர ஆகிய வளாகங்களை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

குளியாப்பிட்டி வளாகத்திற்கு 1,942 மில்லியன் ரூபாயும், மாகந்துர வளாகத்திற்கு 1,973 மில்லியன் ரூபாயும் செலவிடப்படவுள்ளதுடன், தற்போதுள்ள பீடங்களுக்கான கட்டடத் தொகுதிகளுக்கான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு மேலும் 262 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.





## எரிவாயு தட்டுப்பாட்டால் மக்கள் பெரும் அவதி

ரஸீன் ரஸ்மின்

புத்தளத்தில் சமையல் எரிவாயுக்கு தொடர்ந்தும் பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

புத்தளம், பாலாவி, கற்பிட்டி ஆகிய பகுதிகளில் எரிவாயு விற்பனை நிலையங்களில் ‘கேஸ் இல்லை’ என்ற அறிவித்தல் தொங்க விடப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

எனினும், புத்தளம் பகுதிக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகம் செய்கின்ற மதுரங்குளி 10 ஆம் கட்டை பகுதியில் உள்ள மொத்த விற்பனை நிலையத்தில் மாத்திரம் சமையல் எரிவாயு மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

சமையல் எரிவாயுவை பெற வருகை தரும் மக்களுக்கு, மொத்த விற்பனை நிலைய ஊழியர்களால் அவர்களது இலட்சனை பொறிக்கப்பட்ட இலக்கம் வழங்கப்படுகிறது.

நாள் ஒன்றுக்கு நூறு இலக்கங்கள் மாத்திரமே வழங்கப்படுகின்றன. ஏனையோர் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

இன்றும் (நேற்று) காலை முதல் நூறு பேருக்கு மாத்திரமே சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டுள்ளது. பின்னர் வருகை தந்த 30 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் சமையல் எரிவாயு பெற்றுக்கொள்ள முடியாத நிலையில், விற்பனையாளர்களோடு முரண்பட்டு திரும்பிச் சென்றமையை காணமுடிந்தது.

> புத்தளம் பகுதிக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகம் செய்கின்ற மதுரங்குளி 10 ஆம் கட்டை பகுதியில் உள்ள மொத்த விற்பனை நிலையத்தில், நூறு பேருக்கு மாத்திரமே சமையல் எரிவாயு விற்பனை செய்யப்படுகிறது

**கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9 (2) கீழ் கீழ்க்கானும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு 14 செப்டெம்பர் மாதம் 2021 ஆம் திகதி முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

**கம்பனியின் பழைய பெயர்** : களம்பு லொஜிஸ்டிக்ஸ் மெடிக்கல் சேர்விசஸ் (பீவீடீ) எல்டீடி

**கம்பனியின் புதிய பெயர்** : விடா மெடிக்கல் (பீவீடீ) எல்டீடி

**கம்பனியின் இல** : PV 00230630

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம் முகவரி** : இல. 63/ 1, வோட் பிளேஸ், கொழும்பு 07

**கம்பனி செயலாளர்கள்**
**கோபரேட் எட்வைசரி சேர்விசஸ் (பீவீடீ) எல்டீடி**

# 13ஐ அமல்படுத்தி வலுப்படுத்தவும்

கே.எல்.ரி.யுதாஜித்

தமிழர்களுக்கான தீர்வு, சுயாட்சியாக இருந்தாலும் 13ஆவது திருத்தச் சட்டத்தை தற்காலிகமாவேனும் அமல்படுத்தவதற்கு தமிழ்த் தலைமைகளால் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் வரவேற்கத்தக்கது என, முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் பத்மநாபா மன்றத்தின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) தலைவருமான இரா. துரைரெத்தினம் தெரிவித்தார்.

இதை வலுவுள்ளதாக மாற்றுவதற்கு, விடாமுயற்சியுடன் செயற்படுமாறும் அவர் அறைகூவல் விடுத்துள்ளார்.

இவ்விடயம் குறித்து நேற்று (27) அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

1989ஆம் ஆண்டில் இருந்து இன்று வரையும், 33 வருடங்களாக மாகாண சபை முறை நிர்வாகம் அமலில் உள்ளது. இது பாராளுமன்றத் சட்டத் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்ட ஓர் அரசியல் அதிகாரமாகும்.



13ஆவது திருத்தச்சட்ட அரசியல் அதிகாரத்திலுள்ள சில அதிகாரங்கள், மாகாண முறைமைக்குக் கீழ் கொண்டு வரப்படவில்லை. பல விடயங்கள் மத்திக்கும், மாகாணத்துக்கும் பொதுவாக உள்ளன. சில விடயங்கள் மட்டுமே மாகாணத்துக்கென தனியாக உள்ளன.

13 ஐப் பொறுத்தவரையில் சிறுபான்மை இனத்துக்காக வடக்கு, கிழக்கை இணைத்து ஒரு மாகாண சபையாக இயங்கி வந்த நிலையில், பல அதிகாரங்கள் மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டன. காலப்போக்கில் இனவாத அரசாங்கங்களால், சில அதிகாரங்கள் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணசபை 30.06.2006ஆம் ஆண்டு கால கட்டத்தில் வடக்கு, கிழக்கு இணைத்த முறைமை தவறென, பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த ஒருவரால் வழக்குத் தாக்குதல் செய்யப்பட்டு வடக்கு, கிழக்கு மாகாண சபை நிர்வாகம் கிழக்கு வேறாக, வடக்கு வேறாக பிரிக்கப்பட்டது.

இதேவேளை, சிறுபான்மை இனத்துக்கு உள்ள அதிகாரத்தை அரசாங்கம் இல்லாமலாக்குவதோடு, புதிய அதிகாரங்களைத் தர மறுக்கின்ற செயல் வடிவத்தை இல்லாமலாக்குவதற்கும், சர்வதேச அங்கிகாரத்தைப் பெற்றுக் கொண்டு சர்வதேசத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்த தமிழ்த் தலைமைகள் செயல் வடிவம் கொடுக்க வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கலையும் அபிவிருத்தியையும், சமூகம் ஏற்றுக் கொண்ட நிலையில் தமிழ்த் தலைமைகள், இவ்விடயத்தில் உள்ளடக்கப்பட்ட அதிகார பரவலாக்கல் தொடர்பாகக் கூடி முடிவெடுத்தமையானது, தமிழர்களின் மத்தியில் நல்லதொரு விழிப்பை ஏற்படுத்தியுள்ளது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழர்களின் தலைவிதியை தீர்மானிக்கும் பொறுப்பை ஒப்படைப்பது

# ஆபத்தானது

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில், மீண்டும் ஒருமுறை சர்வதேசம், அவர்களைக் கையாள ஆரம்பித்திருப்பதாக, தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

மேலும், தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் பொறுப்பை, தனிக் கட்சிகளிடமும் தனிநபர்களிடமும் விட்டுவிடுவது மிகவும் ஆபத்தானது எனவும் கூறினார்.



தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் அரங்கு, நேற்று முன்தினம் (26), நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வரங்குக்குத் தலைமை வகித்து உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், ஜனாதிபதியாக ஜே.ஆர். ஜெயவர்தன இருந்தபோது, இலங்கையின் கதவுகளை அமெரிக்காவுக்கு அகலத் திறந்துவிட்டிருந்தார். அப்போது, அமெரிக்கப் பிரசன்னத்தை இலங்கையில் தவிர்ப்பதற்காக, ஈழத்தமிழர்களை இந்தியா கையாண்டிருந்தது. இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சியளித்து, இலங்கையைத்தன் வழிக்குக் கொண்டுவந்திருந்தது.

இப்போது, ராஜபக்ஷர்களின் அரசாங்கம், இலங்கையைச் சீனாவுக்குத் திறந்துவிட்டுள்ள நிலையில், இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து இலங்கையைப் பணியவைக்கும் முயற்சியில், தமிழ்க் கட்சிகளைக் கையாளத்தொடங்கியுள்ளன.

இந்தியாவும் அமெரிக்காவும் சீனாவும், தமிழ்க் கட்சிகளைக் கையாளத் தொடங்கியிருக்கும் சூழ்நிலையில், இக்கட்சிகள் இராஜதந்திர ரீதியாக இந்நாடுகளைக் கையாளுவதில் தொடர்ந்தும் தவறிழைத்து வருகின்றன.

இந்நிலையில், தமிழ்த் தேசிய அரசியலைச் சரியான செல்நெறிக்கு நகர்த்துவதற்கு, வலுவானதொரு சிவில் சமூகக் கட்டமைப்பை உருவாக்குவது அவசியமாகும்.

கூட்டுக்கட்சிகளுக்குள்ளே கட்சிகளாகவும் கட்சிகளுக்குள்ளே தனித்தனித் தலைவர்களாகவும் பிரிந்து நிற்பது, ஈழத் தமிழர்களைக் கையாளுவதற்கு, சர்வதேசத்துக்கு இலகுவானதாக இருக்கும். ஆனால், ஈழத்தமிழ் இனத்துக்கு மிகவும் ஆபத்தானது.

இந்நிலையிலேயே தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்டு கட்சிகளை ஒருங்கிணைக்கவும் சர்வதேசங்களைத் தமிழ்த் தரப்புக் கையாளுவதற்கான நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்கும் சிவில் சமூகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது எனவும், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

சுற்றுலாக்கு வந்தோரிடையே மோதல்:

# ஒருவர் படுகொலை: சந்தேகநபர்கள் தப்பியோட்டம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, பூநகரி, கௌதாரிமுனைக்கு சுற்றுலாச் சென்றிருந்த இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில், ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (26) மாலை 3.20 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் வீதி பகுதியைச் சேர்ந்த ரஞ்சன் நிரோசன் (வயது 22) என்ற இளைஞனே, இவ்வாறு கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு, படுகொலைசெய்யப்பட்டுள்ளார்.

கௌதாரிமுனைக்கு ஆனைக்கோட்டையில் இருந்து 17 பேர் கொண்ட குழு சுற்றுலா சென்றுள்ளது.

இதேபோல், குருநகரில் இருந்து படகு மூலம் மற்றொரு குழு அங்கு சுற்றுலா வந்திருந்த நிலையில், இரு குழுக்களுக்கு இடையிலும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த வாய்த்தர்க்கம், மோதலாக மாறிய நிலையில், குறித்த இளைஞன், கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டார்.

இதில் படுகாயமடைந்த இளைஞனை, வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற போதும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து, குருநகரில் இருந்து படகு மூலம் அங்கு வந்திருந்த குழு, அங்கிருந்து தப்பி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஊடகவியலாளர்களுக்கு

# காணி வழங்கல்

தீஷான் அஹமட்

அரசாங்கத் தகவல் திணைக்கள அடையாள அட்டையைக் கொண்ட, தமக்கென காணி அற்ற திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு வீடு அமைக்க காணி வழங்கும் நடவடிக்கையை, மாவட்டச் செயலாளர் மேற்கொண்டுவருகின்றார்.

அதன்படி விண்ணப்படிவத்தை, மாவட்டச் செயலகத்தில் அல்லது தங்களுடைய பிரதேச செயலகப் பிரிவில் பெற்று, 2022.01.15ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் ஒப்படைக்க முடியுமென திருகோணமலை மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.



13 தங்கப் பதக்கங்களை சுவீகரித்த

# சாதனை மாணவி தர்ஷிகாவுக்கு வாழ்த்து

வி.ரி.சகாதேவராஜா

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் 13 தங்கப் பதக்கங்களை சுவீகரித்து, சிறந்த மருத்துவ பீட மாணவியாகத் தெரிவுசெய்யப்பட்ட கிழக்கு மாகாணத்தின் 'முதல் சாதனை மாணவி' தணிகாசலம் தர்ஷிகாவை, பாராளுமன்ற உறுப்பினர்களான இ.சாணக்கியன், த.கலையரசன் ஆகியோரும் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கே.ஜெயசிறிலும் வாழ்த்தினர்.

அக்கரைப்பற்று வீட்டுக்கு நேற்று முன்தினம் (26) மாலை சென்ற இவர்கள், மாணவியை பாராட்டியதோடு, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

இக்குழுவினருடன் இலங்கை தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் துணைச்செயலாளர் அ.நிதான்சன், அமைப்பாளர் ரி.பிரதீபன், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு மாணவியை வாழ்த்தினர்.

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பட்டமளிப்பு விழாவின்போது வழங்கப்படும் 37 தங்கப்பதக்கங்களில், சிறந்த மருத்துவ பீட மாணவ விருது உள்ளடங்களாக 13 தங்கப் பதக்கங்களை தர்ஷிகா கைப்பற்றியுள்ளார்.

அத்தோடு, குறித்த பீடத்தின் முதல்நிலை மாணவியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



விபத்தில்

# வாகன சாரதி ஸ்தலத்தில் பலி

ஹஸ்பர்

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி -திருகோணமலை வீதி, 96ஆம் கட்டை முள்ளிப்பொத்தானை பகுதியில் நேற்று (27)காலை இடம்பெற்ற கனரக வாகன விபத்தில், சாரதி ஸ்தலத்தில் பலியாகியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையில் இருந்து சீமெந்து ஏற்றிச் சென்ற கனரக வாகனமும் திருகோணமலையை நோக்கி மண் கலந்த சிறிய கல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் சீமெந்து ஏற்றிச் சென்ற வாகன சாரதியே ஸ்தலத்தில் பலியாகியுள்ளார்.

கல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகன சாரதி படுகாயமடைந்த நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரதான வீதியில் விபத்து ஏற்பட்டமையால் அவ்வீதியூடான போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டிருந்ததுடன், விபத்துக்குள்ளான வாகனங்கள் இரண்டும் பெக்கோ இயந்திரத்தைக் கொண்டு அப்புறப்படுத்தப்பட்டன.

உயிரிழந்தவரின் சடலம், திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

கல்முனை மாநகர சபை

# உறுப்பினராக றஜப்தீன் பதவியேற்பு

அஸ்லம் எஸ்.மௌலானா, நூசிக் நாபீஸ்

கல்முனை மாநகர சபையின் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள வர்த்தகரும் சமூக சேவையாளருமான எம்.ஐ.எம். றஜப்தீன், தனது சத்தியப் பிரமாண பத்திரத்தை மாநகர மேயர் ஏ.எம்.றகீபிடம் நேற்று (27) கையளித்து, உறுப்பினர் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கல்முனை மாநகர சபையின் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் உறுப்பினராக பதவி வகித்து வந்த சட்டத்தரணி என்.



எம்.அஸாம் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே மருதமுனையை சேர்ந்த எம்.ஐ.எம். றஜப்தீன் அக்கட்சியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வில் மாநகர ஆணையாளர் எம். சி.அன்சார் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.







பொலிஸ் காவலரண்

# பொலிஸ் நிலையமாக திறந்துவைப்பு

செ.கீதாஞ்சன், சுப்பிரமணியம் பாஸ்கரன்

மாந்தை கிழக்கு பிரதேசத்தில், பொலிஸ் காவலரணாக செயற்பட்டு வந்த பொலிஸ் காவலரண், நேற்று (27), நட்டாங்கண்டல் பிரதேசத்தில், பொலிஸ் நிலையமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பூவரசன்குளம், கரும்புள்ளியான், செல்வபுரம், பாண்டியன்குளம், மூன்றுமுறிப்பு, நட்டாங்கண்டல், பொன்னகர், சிராட்டிகுளம் போன்ற கிராமங்களை சேர்ந்த மக்களுக்கும் 10 பாடசாலைகள் உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கி, இந்தப் பொலிஸ் நிலையம் தனது சேவையை மேற்கொள்ளவுள்ளது.

யாழிலிருந்து

# சிலைகளை கடத்தியவர்களுக்கு விளக்கமறியல்

எம்.றொசாந்த், எஸ். நிதர்ஷன்

வலிகாமம் வடக்கில் உள்ள கோவில் விக்கிரகங்களை கடத்தி, விற்பனை செய்து வந்த இருவரையும், எதிர்வரும் 05ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மல்லாகம் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வலிகாம் வடக்கு பிரதேசத்தில் உள்ள கோவில்களில் இருந்த பிள்ளையார் உள்ளிட்ட கடவுள் விக்கிரகங்களைக் கடத்தி, கொழும்பில் விற்பனை செய்த குற்றச்சாட்டில், கீரிமலை - நல்லிணக்கபுரம், புத்தூர் - நவக்கிரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவர், 24ஆம் திகதி, காங்கேசன்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், 09ஆம் திகதி முதல் 23ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், கொழும்புக்கு கடத்தி விற்பனை செய்யப்பட்ட சிலைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், கொழும்புக்கு விரைந்த பொலிஸ் குழுவினர், 25ஆம் திகதியன்று, கொழும்பில் விற்பனை செய்யப்பட்ட 20 சிலைகளை மீட்டு வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் (26), சந்தேக நபர்களை, மல்லாகம் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதை அடுத்து, அவர்களை எதிர்வரும் 05ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு, நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



வேப்ப மரம் முறிந்து விழுந்து

# குடும்பஸ்தர் உயிரிழப்பு

செந்தூரன் பிரதீபன்

தெல்லிப்பளை, சுலயம்பதி பகுதியில், நேற்று முன்தினம் (26) மாலை, வீட்டில் இருந்த வேப்ப மரத்தை தறிக்கும் போது, மரம் முறிந்து விழுந்ததில், குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான எட்வேட் மதிவண்ணன் (வயது 41) என்பவரே, இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை தெல்லிப்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இ.தொ.காவுக்கு

# காலம் கடந்து ஞானம் பிறந்துள்ளது

## இராதா எம்.பி தெரிவிப்பு

■ எஸ்.கணேசன்

தொழிலாளர்களுக்காக தொழிற்சங்கங்கள் ஒன்றுபட வேண்டும் என இன்று இ.தொ.கா கூறியதை, நாங்கள் என்றோ கூறினோம் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஸ்ணன், ஆனால் இப்பொழுதும் நாங்கள் தயார். நீங்கள் தயாரா எனக் கேள்வி எழுப்பினார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தொழிலாளர்களின் நலன் கருதி தொழிற்சங்கங்கள் ஒன்றுபட வேண்டும் என்று கூறியிருக்கின்றமை தொடர்பாக, நேற்று முன்தினம் (26) டிக்கோயா வனராஜாவில் நடைபெற்ற கூட்டத்தில் கருத்து தெரிவிக்கின்ற பொழுதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர்களின் நன்மை கருதி அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றினைந்து செயற்பட முன்வர வேண்டும் என்ற கருத்தைத்




தெரிவித்துள்ளது. அதனை நான் வரவேற்கின்றேன். ஆனால், இந்த விடயத்தை நாங்கள், மலையக மக்கள் முன்னணியாகவும் தமிழ் முற்போக்கு கூட்டணியாகவும் கடந்த காலங்களில் வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

ஆனால், அன்று அதனைக் கண்டு கொள்ளாதவர்கள், இன்று அதே விடயத்தைப் பேசுகின்றார்கள். இது காலம் கடந்த ஞானமாக இருந்தாலும் பரவாயில்லை, நாங்கள் தொழிலாளர்களுக்காக இணைந்து செயற்படுவதற்கு எப்பொழுதும் தயாராகவே இருக்கின்றோம்.

எனவே, அரசாங்கத்துடன் இணைந்திருக்கின்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸே இதற்கான முன்னெடுப்புகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், நாங்கள் இணைந்து செயற்படுவதற்குத் தயாராகவே இருக்கின்றோம்.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்பே, தொழிலாளர்களின் நன்மை கருதி, கட்சி அரசியல் பேதங்களை மறந்து, நாம் ஒன்றுபட வேண்டும் என்று தெரிவித்திருந்தேன். ஆனால் அன்று அதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மௌனமாகவே இருந்தது. இருந்தாலும் தற்பொழுது காலம் கடந்த ஞானம் ஏற்பட்டுள்ளதை வரவேற்கின்றேன்.

இதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டால், நாங்கள் என்றும் தொழிலாளர்களுக்காக யாருடனும் இணைந்து செயற்படுவதற்கு தயாராகவே இருக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# பதுளை விபத்தில் அறுவர் காயம்

■ எம். செல்வராஜா

ஓட்டோவும் மோட்டார் சைக்கிளொன்றும் நேருக்கு நேராக மோதி விபத்திற்கு உள்ளாகியதில், ஆறு பேர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பதுளை - பசறை பிரதான பாதையில் ஏழாம் மைல் கல்லருகே இவ் விபத்து, நேற்று(27) இடம்பெற்றுள்ளது.

பதுளை பகுதியிலிருந்து பசறை நோக்கி சென்று கொண்டிருந்த ஓட்டோவும் மொனராகலையிலிருந்து பதுளை நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேராக மோதி விபத்திற்குள்ளாகின.

இவ்விபத்தில் ஓட்டோ சாரதி உள்ளிட்ட ஓட்டோவில் பயணித்த நால்வரும் மோட்டார் சைக்கிளை செலுத்தியவரும் அவருடன் வந்தவரும் காயங்களுக்குள்ளாகினர்.

காயமடைந்த அனைவரும் பதுளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன், மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பூட்டுகளை உடைத்தவர்

# மாத்தளையில் சிக்கினார்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை உள்ளிட்ட பல நகரங்களின் வர்த்தக நிலையங்களை உடைத்து, பல இலட்சம் ரூபாய் பணத்தை கொள்ளையடித்த நபரொருவர் நேற்று (27) கைதுசெய்யப்பட்டுள்ளார் என மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் இரவு நேரங்களில் வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களை எடுத்துச் சென்று, கொரோனா ஆடையை அணிந்தவாறு வர்த்தக நிலையங்களின் பூட்டுகளை உடைத்து பொருள்கள், பணத்தை திருடி வந்துள்ளார்.

சந்தேகநபர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் எனத் தெரிவித்துள்ள பொலிஸார், இவரால் திருடப்பட்ட பொருள்கள் விற்கப்பட்டுள்ளன. அவற்றில் அதிகமான பணத்தை போதைப் பொருள் பாவனைக்காக செலவிட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மேலும் சந்தேகநபர் மாத்தளை, வத்தேகம, கடுகண்ணாவை, மஹவெல, அலவத்துகொட, இரத்தோட்டை, மெனிக்ஹின்ன உள்ளிட்ட பல இடங்களில் திருடியுள்ளமை தெரியவந்துள்ளது.

அத்துடன் சந்தேகநபரிடமிருந்து இரும்பால் ஆன ஆயுதம் ஒன்று, 165 கிலோ கிராமுக்கு மேற்பட்ட மிளகு, பாக்கு உள்ளிட்ட பொருட்களும் ஓட்டோ ஒன்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.








# கௌரவிப்பு...

மலையக கலை கலாசார சங்கத்தின், 'இரத்தினதீப' அமைப்பு ஒழுங்கு செய்திருந்த, காலம் சென்றவர்களான இலங்கையின் பிரபல பாடகி என்ஜலின் குணதிலக்க, தென் இந்திய ஜனரஞ்சகப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் ஆகியோர்களது நினைவு தின நிகழ்வு கண்டி கெப்பெடிபொல மண்டபத்தில் நேற்று முன்தினம் (26) மாலை, நடைபெற்றது.

கண்டி மேயர் கேசர சேனாநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சமூக சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கௌரவிக்கப்பட்டனர்.

(படம்: மொஹொமட் ஆஸிக்)

# தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச்செயலாளர்

## ஜெ. எம். செபஸ்டியன் காலமானார்

தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச்செயலாளர் ஜெ. எம். செபஸ்டியன் காலமானார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக நேற்றை தினம் (27) தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஹட்டன் தலைமைக் காரியாலத்தில் வைக்கப்பட்டு, மாலை லின்போர்ட் தோட்டத்துக்கு எடுத்து செல்லப்பட்டதுடன்,



இன்று (28) மாலை 3 மணிக்கு லின்போர்ட் கத்தோலிக்க மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



# கொத்மலையில் தீப்பந்த போராட்டம்

■ எஸ்.கணேசன்

எரிபொருள் விலை ஏற்றம் உள்ளிட்ட இதர பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உடனடி தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தி, ஐக்கிய மக்கள் சக்தியின் கொத்மலை பிரதேச அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் இணைந்து, கொத்மலை, தவலந்தென்ன நகரத்தில் தீப்பந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டம் நேற்று முன்தினம் (26) இரவு முன்னெடுக்கப்பட்டதுடன், இப்போராட்டத்தில் அதிகமானவர்கள் கலந்துகொண்டனர்.

# நிதி செயலாளரின் மறைவு ஈடு செய்ய முடியாதது

## திகாம்பரம் எம்.பி

தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதி செயலாளர் மைக்கல் செபஸ்டியனின் மறைவு, இலகுவில் ஈடு செய்ய முடியாதது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

பிரதிநிதியாக சங்கத்தில் இணைந்து, உதவி செயலாளர், நிர்வாக செயலாளர் எனப் பதவி வகித்ததோடு, கடந்த 20 வருட காலமாக நிதி செயலாளராக பணியாற்றிய இவர், நல்ல வழிகாட்டியாகவும் இருந்துள்ளார்.

சங்கத்தின் இக்கட்டான நிலைமையில்கூட சங்கத்திற்காகவே உழைத்தவர். அவரின் இழப்பு பெரு வேதனை தருகிறது. அன்னாரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள் எனவும் இரங்கல் தெரிவித்துள்ளார்.

# மகாவலி ஆற்றில் முதலைகள் பெருகும் அபாயம்

■ சேஹ்ன் செனவிரத்ன

கட்டட பொருள்கள் விற்பனை நிலையம் மூலம் மகாவலி கங்கையில் முதலைகளின் பெருக்கம் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கண்டி, குடாரவத்த மாவத்தையில் நடத்திச் செல்லப்படும் கட்டட பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு, வெளிமாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்படும் மணல் மூலம், முதலைக் குட்டிகள் வருவதாகவும் இதனால் மகாவலி கங்கையில் முதலைகளின் பெருக்கம் அதிகரிக்கும் நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய குறித்த வர்த்தக நிலையத்துக்கு, கந்தளாய் பிரதேசத்திலிருந்து கொண்டு வரப்பட்ட மணலுடன், சில முதலைக் குட்டிகள் காணப்பட்ட நிலையில், மீண்டும் நேற்று (27) அவ்வாறே சில முதலைக் குட்டிகள் மணலிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட முதலைக் குட்டிகள் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த வர்த்தக நிலையத்துக்கு அருகில் உள்ள கால்வாய் ஒன்றில் முதலையொன்றும் காணப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ள நிலையில், அதைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

எனவே, அந்தக் கால்வாயின் நீர் மகாவலி கங்கையை சென்றடைவதால், மகாவலி கங்கைக்கு முதலை சென்றிருக்கலாம் என்றும் பிரதேசவாசிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.



நியமனம் வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து

# ஆசிரியர் உதவியாளர்கள் ஆர்ப்பாட்டம்

■ டி.ஷங்கீதன்

மத்திய மாகாணத்தில் ஆசிரியர் உதவியாளர்களாக இருக்கின்ற 380 பேருக்கு இதுவரையில் நியமனம் வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்றைய தினம் (27), கண்டியில் அமைந்துள்ள ஆளுநரின் அலுவலகத்திற்கு முன்பாக, ஆசிரியர் உதவியாளர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆசிரியர் உதவியாளர்கள், "நாங்கள் பல வருடங்களாக போராட்டம் செய்து வருகின்ற பொழுதும், எங்களுக்கான நியமனத்தை வழங்குவதில் மத்திய மாகாணம் இழுத்தடிப்புச் செய்து வருகின்றது.

ஏற்கெனவே பல முறை எங்களுக்கு நியமனம் வழங்குவதாக கடிதம் அனுப்பியிருந்த போதிலும் அந்த நியமனங்கள் இரத்து செய்யப்பட்டன. இறுதியாக இந்த மாதம் 18ஆம் திகதி



நியமனம் வழங்குவதாக அறிவித்திருந்த போதிலும் இறுதி நேரத்தில் அதனை இரத்து செய்வதாக அறிவித்திருக்கின்றார்கள்.

ஏனைய மாகாணங்களில் ஆசிரியர் உதவியாளர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டு, அவர்கள் அனைவரும் ஆசிரியர்களாக பணியாற்றி வருகின்றார்கள். எனவே, எங்களுக்கு மாத்திரம் ஏன் இந்த நியமனத்தை வழங்குவதற்கு மத்திய மாகாணமும் ஆளுநரும் இழுத்தடிப்பு செய்கின்றார்கள் என்ற கேள்வி எழுகின்றது எனவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த 380 பேரில், நுவரெலியா மாவட்டத்தில் 198 பேரும் கண்டியில் 17 பேரும் மாத்தளையில் 05 பேரும் பெரும்பான்மை சமூகத்தில் 54 பேரும் கோப்புகள் பூர்த்தி செய்யப்பட்டவர்கள் என்பதுடன், 35 பேரும் கோப்புகள் பூர்த்தி செய்யப்படாமல் 72 பேரும் என மொத்தமாக 380 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தவறி விழுந்தால் 500 அடி பள்ளத்தைக் கொண்ட

# பாதையை புனரமைத்து தருமாறு கோரிக்கை

■ சு.சுரேந்திரன்

மவுசாக்கலை தோட்டம், பசறை - நமுனுகுலை பிரதான வீதியில் இருந்து சுமார் 500 அடிக்கும் மேலான மலைப்பகுதியில் அமைந்துள்ளது. இத்தோட்டத்துக்குச் செல்லும் பிரதான வீதி, மிகவும் சேதமடைந்த நிலையில், எவ்வித வாகனங்களும் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

ஓட்டோ ஒன்று கூட செல்ல முடியாத நிலையில் மிகவும் குறுகியதாகவும் எவ்விதமான பாதுகாப்பு வேலிகளும் இல்லாமல் மிக ஆபத்தான வகையில் இவ்வீதி காணப்படுகின்றது.

இந்தப் பாதை வழியே தான், பசறை, நமுனுகுலை போன்ற நகரங்களுக்கு தேவைகளுக்காக அம்மக்கள் செல்ல வேண்டும்



என்பதுடன், வாடகைக்கு வாகனங்களை அழைத்தால் கூட, பாதையின் மோசமான நிலைமையின் காரணமாக, வாகன சாரதிகள் வருவதற்கு அச்சப்படுகின்றனர்.

எனவே, இப்பாதையைப் புனரமைத்துத் தருவதற்கு பதுளை மாவட்ட அரசியல் தலைமைகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# அழுக்குப் படிந்த கைகளால் சுத்தம் செய்யப் பணிக்கக்கூடாது

ஒருவருக்கு அறிவுரை கூறும்போது, அந்தத் துறையில் எந்தளவுக்கு அனுபவம் பெற்றிருக்கின்றோம் என்பது தொடர்பில், தங்களைத் தாங்களே ஒருதடவை தட்டிப்பார்த்துக்கொள்ளவேண்டும். இல்லையேல், எவ்வளவுதான் ஏற்றுக்கொள்ளக் கூடிய அறிவுரைகளைக் கூறினாலும் பிரயோசனமற்றதாய் போய்விடும்.

பாராளுமன்றத்துக்கு தெரிவாகியிருக்கும் மக்கள் பிரதிநிதிகளில் பலரும் மதிப்பிழந்தவர்களாய் இருக்கின்றனர். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர், இராஜாங்க அமைச்சர், பிரதியமைச்சர் பதவிகளை வகித்த பலர், பொதுத் தேர்தலில் தோல்வியடைந்துவிட்டால், ஏதோவொரு நிறுவனத்தில் பதவிகளைப் பெற்றுக்கொள்கின்றனர். அதனால், பதவியிலிருந்த காலத்தில் அவர்களால் செய்யப்பட்ட, ஊழல், மோசடிகள் யாவும் கிடப்பில் போடப்பட்டுவிடுகின்றன. அதுமட்டுமன்றி, தங்களுக்கு கிடைத்திருக்கும் வரப்பிரசாதங்களை துஷ்பிரயோகம் செய்துவிடுகின்றனர்.

இந்த அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதியமைச்சர் எனப் பலரும், தங்களுடைய உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்கான தண்ணீர்க் கட்டணத்தைச் செலுத்தவில்லை; எம்.பிக்களுக்கான மாதிவெல வீட்டுத் தொகுதியில் இருந்து, முன்னாள் எம்.பிக்கள் இன்னும் வெளியேறவில்லை போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறானவர்கள் தான், சட்டவாக்க சபையில் இருந்து, நாட்டையும் மக்களையும் நல்வழிப்படுத்தும் சட்டங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றனர். இங்கு, எல்லோரையும் சுட்டுவிரல் நீட்டவில்லை. ஏனெனில், மக்கள் பிரதிநிதிகள் பலர், தங்களை அர்ப்பணித்தும் தங்களுடைய சொத்துகளை இழந்தும், மக்களுக்காக சேவையாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

அதிகாரத்தில் தொடர்ந்தும் இருக்கவேண்டுமென நினைப்போர், மக்களைப் பற்றிச் சிந்திக்கவே மாட்டார்கள். அவ்வாறானவர்கள், தேர்தல் காலங்களில் ஏதாவது சலுகைகளைக் கொடுத்தோ மனங்கள் பூரிக்கும் அறிவிப்புகளை நாக்கூசாமல் விடுத்தோ, மக்களை ஏமாற்றி வென்றுவிடுவர். இன்னும் சிலர், மக்களுக்காகக் கடுமையாக உழைத்து, சேவை செய்திருந்தாலும், இறுதிநேர அரசியல் 'சித்து விளையாட்டு'கள் காரணமாகத் தோல்வியைத் தழுவிக்கொள்வர். அவர்களின் தோல்வி, அப்பிரதேச மக்களுக்குப் பேரிழப்பாகும். கிடைக்கக்கூடிய அற்பசொற்ப சேவைகளும் அம்மக்களுக்கு நிரந்தரமாகக் கிடைக்காமல் போய்விடும்.

மக்கள் பிரதிநிதிகள், தூரநோக்கத்துடன் சிந்திக்க வேண்டும். ஆட்சியதிகாரம் கிடைத்துவிட்டது என்பதற்காக, அனைத்தையும் மாற்றுவதற்கு முயற்சிக்கக்கூடாது. சிலவிடயங்களில், தேசிய கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அதனூடாகவே, நாட்டை முன்னோக்கி நகர்த்திச்செல்ல முடியும்.

பொதுவான விடயங்களில், தேசிய கொள்கைகளை வகுப்பதற்கு இன்றிலிருந்தாவது முயற்சிக்க வேண்டும். இல்லையேல், இன்னும் எத்தனை ஆண்டுகளாயினும், நாட்டை முன்னோக்கி நகரத்தமுடியாது.

மக்கள் பிரதிநிதிகளே, தண்ணீர்க் கட்டணத்தைச் செலுத்தாமல் இருக்கும் போது, சாதாரண பொதுமகனிடமிருந்து முறையாக அறவிடுவதற்கு எத்தனிப்பது; இன்றேல், தண்ணீர்க் கட்டணத்தை அதிகரிக்க முயற்சிப்பது எந்தவகையில் நியாயமானது?

'ஒரு பானை சோற்றுக்கு, ஒரு சோறு பதம்' என்பதுபோல, கூட்டுப்பொறுப்பைக் கொண்டிருக்கும் அரசாங்கத்தில், ஒருவர் தவறு செய்தாலும் அது, முழு அரசாங்கத்தின் மீது, ஆட்காட்டி விரலை காட்டும் என்பதை நினைவில் கொள்ளவும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உங்கள் உயிர், எவ்வளவு உயர்வானது என்பது, உங்களுக்கு ஏற்படும் இன்பம், துன்பம் என்பவற்றைப் பொறுத்துத்தான் உணர்வீர்கள். நோய்கள் திடீரென ஒருவரைப் பீடித்தால், அவருக்கு உயிர்ப்பயம் வந்துவிடுகின்றது. உளறிப் பிதற்றி அழுகின்றார்.

"இறைவா! என்னைக் காப்பாற்றிக் கொள்" என, இறைவனிடம் வேண்டுகின்றார். சாதாரண நிலையில், தன்னிடத்தில் குடியிருக்கும் 'உயிர்' ஒன்று குறித்த எண்ணம் தோன்றுவதில்லை.

அதேபோல்த்தான், எதிர்பாராத வகையில் செல்வம் வந்துவிட்டால், தன்னிலை மறந்துவிடுகின்றார். ஆத்மா, கடவுள், நன்மையான செயல் என்பவை குறித்துச் சிந்திப்பதும் இல்லை. நல்லவழி எண்ணங்களை மறந்து, ஆணவம், அதிகாரம், திமிர் என்பவற்றுக்குள் சிக்குண்டுவிடுகின்றார்கள். சாதாரண மாற்றங்களே, 'கண்மண்' எதுவெனத் தெரியாத வகையில் மாற்றிவிடுகின்றன.

உண்மை எது, பொய் எது என சிந்திப்பதற்கு, தங்களது நேரங்களை ஒதுக்குவதில்லை. ஆனால், துன்பங்கள் சூழ்ந்தால் மட்டும், ஞானம் வந்துவிடுகின்றது. இன்பம் மீண்டும் வந்ததும், தன்னை மாற்றிக் கொள்கின்றான். கடவுளுக்கே பொய் சொல்வது, பலருக்குரிய குணமாகும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# முஸ்லிம் எம்.பிக்களின் கடமை என்ன?

மொஹமட் பாதுஷா

ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு பிரதான கடமையும் தார்மிகமும் இருக்கின்றது. ஓர் ஆசிரியர் என்றால், அவர் மிகுந்த அர்ப்பணிப்புடன், சேவை மனப்பாங்குடன் கடமையாற்றுகின்றாரா என்பது இரண்டாவது விடயமாகும். முதலில் அவர், மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். இதுதான், அவரது தார்மிக கடமை. இது எல்லாத் தொழிற்றுறை சார்ந்தோருக்கும் பொருந்தும்.

அந்தவகையில், முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும் ஒரு தார்மிக கடமை உள்ளது. அதுவும் மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்களுக்கு, சமூகம் தொடர்பில் பாரியதொரு கடமையும் தார்மிகமும் உள்ளது.

ஆனால், அநேகமான முன்னாள், இந்நாள் முஸ்லிம் எம்.பிக்களோ மாகாண சபை உறுப்பினர்களோ, அந்தக் கடமையை உணர்ந்து செயற்பட்டதாகத் தெரியவில்லை.

நாட்டில் இனப்பிரச்சினைக்கான தீர்வு, அதற்கான பொறிமுறைகள், புதிய அரசியலமைப்பு, சமஷ்டி அல்லது அதற்குச் சமமான அதிகார அலகு உள்ளிட்ட பல விடயங்கள் பேசப்படுகின்றன.

இந்தப் பின்னணியில், தமிழ்க் கட்சிகள் பல ஒன்றிணைந்து, தீர்வுத் திட்டம் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கின்றன. இதில், இரண்டு முஸ்லிம் கட்சிகளும் பங்குபற்றுகின்றன. இக்கூட்டங்களின் இறுதியில் தயாரிக்கப்பட்டுள்ள ஆவணத்தில், தமிழ்ப் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கான கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

ஆனால், உண்மையிலேயே, இக்கலந்துரையாடல்களில் அல்லது தயாரிக்கப்படும் ஆவணங்களில் முஸ்லிம்களின் அபிலாஷைகள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா? அவற்றை உள்வாங்கச் செய்யும் பணியை முஸ்லிம் தரப்பு சரிவர நிறைவேற்றி இருக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

ஏனெனில் கடந்த காலத்தில், போர் நிறுத்த உடன்படிக்கை, சமாதானப் பேச்சுவார்த்தை தொட்டு பல கூட்டங்கள், பேச்சுகளில் முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாட்டை அரசியல்வாதிகள் பிரதிவிம்பப்படுத்தியதில்லை என்பதே நிதர்சனமாகும்.

முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள், அபிலாஷைகளைச் சந்தைப்படுத்தி, பசப்பு வார்த்தைகளாலும் கட்சிப் பாடல்களாலும் உணர்வுகளைத் தூண்டிவிட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள், தலைமைத்துவ பதவியை சுகித்துக் கொண்டிருக்கின்றவர்கள், இவ்வளவு காலமும் தமது பிரதான தொழில்சார் கடமையை நிறைவேற்றியுள்ளார்களா என்பது, விடை தெரிந்த கேள்விதான்.

எனவே, முஸ்லிம் அரசியல்வாதிகள், சமூகத்தின் பிரச்சினைகளை ஆழமாக அறிந்திருப்பதும், மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில், அவர்களுக்கு இருக்கின்ற அடிப்படைக் கடமையை நிறைவேற்றுவதன் அவசியத்தை உணர்ந்திருப்பதும், இன்றியமையாத தேவைப்பாடாக உள்ளது.

பொதுவாகத் தொழில்புரிவோரில் சிலர், கடமையுணர்ந்து வேலை செய்வார்கள். இன்னும் ஒரு பகுதியினர், சம்பளத்துக்காக ஏனோதானோவென்று பணிபுரிவார்கள். வேறு சிலர், வேலையைச் செய்யாமல் வெறுமனே பொழுதைப் போக்கிக் கொண்டும் ஏனையோரை குழப்பிக் கொண்டும் இருப்பார்கள்.

முஸ்லிம் அரசியல்வாதிகள், இதில் எந்த வகுதிக்குள் உள்ளடங்குகின்றார்கள் என்பதை, மக்கள் நன்கு அறிவார்கள். ஆனால், 'சமூகம்' இதுபற்றி அவர்களிடம் கேள்வி கேட்பதும் இல்லை. நமது கடமையைச் செய்யவில்லையே என்று, மக்கள் பிரதிநிதிகளும் இதற்காக வெட்கப்படுவதும் கிடையாது.

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் விடுதலை, அபிலாஷகள் போன்றவற்றை முன்னிறுத்தி, அரசியல் செய்வது என்று ஒரு தார்மிகக் கடமை இருக்கின்றது. அதனைச் செய்யாவிட்டாலும் பரவாயில்லை, தாம் பெறுகின்ற சம்பளத்துக்காக வரப்பிரசாதங்களுக்காக, தமது அடிப்படைக் கடமையை, முஸ்லிம் எம்.பிக்கள் ஆற்றவில்லை என்பதுதான் இங்கு முக்கியமானது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மாதாந்தச் சம்பளம் ரூபாய் 50 ஆயிரத்தை விடச் சற்று அதிகமாகும். இதற்கு மேலதிகமாக, ஒவ்வொரு நாடாளுமன்ற கூட்டத்துக்குச் செல்வதற்காக 2,500 ரூபாய், அமர்வு இல்லாத நாள்களில் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக 2,500 ரூபாய், அலுவலகம் ஒன்றை நடத்துவதற்காக ரூபாய் ஒரு இலட்சம், நிலையான மற்றும் அலைபேசிக்காக மாதத்துக்கு 50,000 ரூபாய் போன்ற கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டத்தின் தூரத்தைப் பொறுத்து, எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும். தனிப்பட்ட பணியாள்களின் போக்குவரத்துக்காக மாதமொன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். ஆயிரம் ரூபாய் கேளிக்கை கொடுப்பனவும் உண்டு.

தூர இடங்களைச் சேர்ந்த எம்.பிக்களுக்கு வீடொன்று வழங்கப்படும் அல்லது வாடகை வீட்டில் இருந்தால் அதற்கு குறிப்பிட்டளவான வாடகை கொடுப்பனவு வசதி கிடைக்கும். மக்கள் பிரநிதிநிதிகள் என்ற வகையில் அவர்களுக்கு வருடமொன்றுக்கு 350,000 ரூபாய் முத்திரை கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

அதிசொகுசு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக, தீர்வை விலக்குப் பத்திரங்கள், ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் வழங்கப்படும். அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் ஆகியோருக்கு சம்பளம் மேலும் அதிகம் என்பதுடன், அவர்களது அமைச்சுகளின் ஊடாக, மேலும் பல சலுகைகளும் கொடுப்பனவுகளும் கிடைக்கின்றன.

இதற்கு மேலதிகமாக சமூக கௌரவம், வி.ஐ.பி கடவுச்சீட்டு, விசா வசதிகள், பொலிஸ் பாதுகாப்பு எனப் பலதரப்பட்ட சிறப்பு வரப்பிரசாதங்கள் உள்ளன. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், தம்மைத் தெரிவு செய்த மக்களுக்காகக் குரல் கொடுக்கின்றாரா? அதாவது, கடமையைச் செய்கின்றாரா என்ற எந்த மதிப்பீடும் மேற்கொள்ளப்படாமலேயே, இந்த வெகுமதிகள் வழங்கப்படுகின்றன.

உண்மையில், மக்கள் பிரதிநிதி என்ற வகையில், அவர்களுக்கு இவ்வாறான வரப்பிரசாதங்களும் கௌரவங்களும் கொடுக்கப்பட வேண்டியது அவசியம் என்பதில், யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அந்தப் பதவியின் உயரிய அந்தஸ்தைப் பேணுவதற்கு இவைவெல்லாம் இன்றியமையாதவை.

சம்பளமோ, சிறப்புச் சலுகைகளோ இல்லாமல் எம்.பிக்கள் பணியாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கவும் முடியாது. ஆனால், இவற்றையெல்லாம் சுகிக்கின்ற எம்.பிக்கள், தமது அடிப்படைக் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்காமல் இருக்கவும் முடியாது.

அந்தக் கண்ணோட்டத்தில் நோக்கினால், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் சமூகத்தின் பிரதிநிதிகளாகத் தம்மைப் பிரதிவிம்பப்படுத்துகின்றார்களா? என்னதான் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்ற கேள்விக்கு, இன்னும் விடையில்லை.

தேர்தல் காலத்தில் வீராப்புப் பேசி, மக்களது உணர்வுகளை உரசி விடுகின்ற உத்தியைக் கற்றுவைத்துள்ள முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள், தேர்தல் முடிந்த மறுநாளே காணாமல் போய்விடுகின்றார்கள். அவர்களால், முச்சந்திக்கு அழைத்து வரப்பட்ட சமூகம், 'திருவிழாவில் தொலைந்த குழந்தையைப் போல' திக்குத் தெரியாது நிற்கின்றது.

முஸ்லிம்களின் நீண்டகாலப் பிரச்சினைகள், அபிலாஷைகள், குறுங்கால நெருக்கடிகள் என எல்லா விடயங்களும் அப்படியே கிடக்கின்றன. 'கும்பகர்ணன் கண்விழித்தாற்போல', எப்போதாவது தூக்கத்தில் இருந்து எழுந்து, ஓர் அறிக்கை விடுவதோடு அவர்களது சமூகப் பணி முடிந்து விட்டதாக நினைக்கின்றார்கள்.

ஆனால், சமூகம்தான் 25 வருடங்களாக ஒரே இடத்திலேயே நிற்கின்றதே தவிர, முஸ்லிம் எம்.பிக்கள் தமது சொந்த அரசியல் வாழ்க்கையில் நிறையவே முன்னேறி, தொலைதூரம் சென்று விட்டார்கள். 99 சதவீதமானோர், அரசியலை வைத்து நிறையவே உழைத்திருக்கின்றார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

எம்.பியாகப் போட்டியிடுமாறு, எந்த அரசியல்வாதியினுடைய காலைப் பிடித்து, மக்கள் கேட்டது கிடையாது; தலைமைத்துவ பதவிகளும் அப்படித்தான். இது அவர்களாகத் தேர்ந்தெடுத்த பணிதான்.

எனவே, அந்தத் தொழிலுக்குரிய அடிப்படைப் பணிகளை நிறைவேற்றுவது என்பது சேவையல்ல; வாங்குகின்ற சம்பளம், வரப்பிரசாதங்கள் எனபவற்றுக்காகச் செய்ய வேண்டிய கடமைகள் என்பதை, நினைவில் கொள்ள வேண்டும்.

ஒரு சமூகத்தின் மக்கள் பிரதிநிதிகள் என்றால், தமது பதவியின் வகிபாகம் என்ன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள், அபிலாஷைகள் பற்றிய அறிவும் தேடலும் இருக்க வேண்டும். அதுபற்றிய ஆவணங்களையும் அனுபவசாலிகளின் தகவல்களையும் சேகரித்து அறிவது இன்றியமையாதது.

ஒரு வைத்தியர் என்றால், அவர் தனது வாகனத்தில் 'சிறுவை' அடையாளத்தைப் போடுகின்றாரோ இல்லையோ, அவரிடம் ஒரு 'ஸ்டெதஸ்கோப்' இருக்க வேண்டும். அதுபோல, முஸ்லிம் சமூகத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான அர்ப்பணிப்பும் அதற்குத் தேவையான தரவுகளும் விரல் நுனியில் இருக்க வேண்டும்.

இந்தப் பின்னணியில் ஏனைய தரப்புகளுடன் பேசுவதற்கு முன்னதாக, முஸ்லிம் கட்சிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோர் ஒன்றிணைந்து பேச வேண்டும். இனப்பிரச்சினை, அரசியலமைப்பு மறுசீரமைப்பு போன்ற தேசிய முக்கியத்துவமிக்க விடயங்களில், முஸ்லிம் சமூகத்தின் கோரிக்கை, நிலைப்பாடு என்பவற்றில், பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

அதுபோல, அரசாங்கத்திடமோ தமிழ்க் கட்சிகளிடமோ வெளிநாட்டு தரப்பிடமோ பேசுகின்ற போது, முன் தீர்மானிக்கப்பட்ட விடயங்களையே முன்வைக்க வேண்டும். ஒவ்வோர் அரசியல் தலைவரும் எம்.பி.யும், தமக்கு எல்லாம் தெரியும் என்ற தோரணையில், சமூகத்தை வழிநடத்த முற்படக் கூடாது.

## கடிதங்கள்

### மக்களுக்கு கிடைக்காத மருதமுனை சுனாமி வீடுகள்

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு, 17 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும், மருதமுனை 65 மீட்டர் வீட்டுத் திட்டத்தில், 78 வீடுகள் மக்களுக்கு வழங்கப்படாமல், பாழடைந்த நிலையில் காணப்படுகின்றன. சுனாமிப் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மருதமுனை மக்களுக்காகக் கட்டப்பட்ட, மருதமுனை 65 மீட்டர் வீட்டுத் திட்டம், கிராமத்தின் மேற்குப் புறமாக கிடந்த மேட்டு வட்டை காணியில், தேசிய வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சால் 186 வீடுகளை நிர்மாணிப்பதற்கு, அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதன் நிர்மாண வேலைகள் 2006ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன.

முதற்கட்டமாக, 2012 ஆம் ஆண்டு 50 வீடுகள் கையளிக்கப்பட்டன. 178 வீடுகளில், இதுவரை 100 வீடுகள் மாத்திரமே, மக்கள் பாவணைக்கு கையளிக்கப்பட்டுள்ளன. மீதமாக உள்ள 78 வீடுகளும் மக்களுக்கு வழங்கப்படாது, இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில், குறித்த 78 வீடுகளும், பாழடைந்த நிலையில் காணப்படுகின்றன. வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த உபகரணங்கள், மின்சாரப் பொருட்கள், ஜன்னல்கள், வீட்டு கூரைகள் போன்றவை திருடப்பட்டும் உடைக்கப்பட்டும் காணப்படுகின்றன. மனிதர்கள் மாத்திரமல்லாது, விலங்குகள் அசிங்கங்கள் செய்யும் மறைவிடமாகவும் போதைவஸ்து பாவிக்கும் இடமாகவும் இந்தவீடுகள் மாறி உள்ளன.

எனவே, குறித்த வீடுகளை விரைவில் வழங்க, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அணைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

– ஏ.எல்.எம். ஷினாஸ்



சென்னை

மீனவர் பிரச்சினையைத் தீர்க்க

# கூட்டுக்குழு நடவடிக்கை



மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் வருங்காலங்களில் நடைபெறாமல் இருக்கவும் அதனை முழுமையாகத் தடுக்கவும், கூட்டுக்குழு மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என, மத்திய இணையமைச்சர் டொக்டர் எல். முருகன் கூறினார்.

பிரதமரின் 'மனதின் குரல்' நிகழ்ச்சியை, மத்திய இணை அமைச்சர் டொக்டர் எல். முருகன், சென்னையில் பொதுமக்களுடன் இணைந்து கேட்டு இரசித்தார். பின்னர், ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது:


நரேந்திர மோடி, பிரதமராகப் பொறுப்பேற்றதில் இருந்து, மீனவர் ஒருவர் கூட சுட்டுக் கொல்லப்படவில்லை. எனினும், இலங்கை படையினரால் மீனவர்கள் கைது செய்யப்படுகின்றனர். தற்போது கூட 55 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என வினவினர்.

அவர்களை விடுவிக்க வலியுறுத்தி, வெளியுறவுத்துறை அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளேன் எனத் தெரிவித்த முருகன், அவரும் அதற்கு முன்னரே மீனவர்களை விடுவிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளார் என்றார்.

இது தொடர்பாக, கூட்டுக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடவேண்டிய இந்தக் குழு, கொரோனா காரணமாகக் கூடவில்லை. விரைவில் இந்தக் குழு கூடி, இதுபோன்ற நிகழ்வுகள் நடக்காத படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

சன்னி லியோனுக்கு

# நாள்கள் கெடு



சன்னி லியோன் நடனத்தில் 'சரிகமா மியூசிக்' நிறுவனம் வெளியிட்டுள்ள ''மதுபன் மே ராதிகா'' எனும் பாடல் காணொளியை மூன்று நாள்களுக்குள் இணையத்தில் இருந்து நீக்க வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த மத்திய பிரதேச மாநில அமைச்சர் ஒருவர் கெடு விதித்துள்ளார்.

இந்துக்கள் மனதைப் புண்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகக் குற்றம் சாட்டி, இவ்வாறு கெடு விதித்துள்ளார். 1960ஆம் ஆண்டு வெளியான ''கோகினூர்'' எனும் ஹிந்தி திரைப்படத்தில் இடம்பெற்ற இந்தப் பாடலின் ரீமேக் சரிகமா நிறுவனத்தால் அண்மையில் வெளியிடப்பட்டது.

இந்துக் கடவுள்கள் கிருஷ்ணர் மற்றும் ராதை இடையேயான காதலை விவரிக்கும் வகையில் இந்தப் பாடல் இருப்பதாக சிலர் கருதுகிறார்கள். பாடகர்கள் கனிகா கபூர் மற்றும் அரிந்தம் சக்கரவர்த்தி ஆகியோர் கடந்த புதன்கிழமையன்று வெளியிடப்பட்ட இந்தப் பாடலை பாடியுள்ளனர்.

இந்தப் பாடலின் காட்சிகளில் சன்னி லியோன் ''ஆபாசமாக நடனமாடி உள்ளதாக'' ஒரு சிலர் குற்றம் சாட்டுகிறார்கள். சமூக ஊடகங்களிலும் இதற்கு எதிரான பல பதிவுகள் வெளியாகி வருகின்றன.

இந்த நிலையில், பாடலின் பெயர் மற்றும் வரிகளை மூன்று நாள்களுக்குள் மாற்றுவதாக 'சரிகமா மியூசிக்' நிறுவனம் அறிவித்துள்ளது.

சென்னை



'ஆதிபராசக்தி அம்மா' நிகழ்ச்சிக்குத் தடை

# அன்னபூரணியை தேடி வேட்டை

ஆதிபராசக்தியின் அவதாரம் தான் கூறிக் கொள்ளும் அன்னபூரணி, ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிக்குத் தடை விதித்துள்ள பொலிஸார், தலைமறைவாகியிருக்கும் அன்னபூரணியைத் தேடி, வலை விரித்துள்ளனர்.


> மண்டப உரிமையாளரை எச்சரித்த பொலிஸார், நிகழ்ச்சி நடத்தக் கூடாதென்றனர்

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் கூட்ரோடு சாலையில் உள்ள வாசுகி திருமண மண்டபத்தில் ஜனவரி முதலாம் திகதி அருள்வாக்கு சொல்லவிருப்பதாக, சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இதையடுத்து, திருமண மண்டப உரிமையாளரை எச்சரித்த அந்த மாவட்ட பொலிஸார், அந்த நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கக் கூடாதென தெரிவித்துள்ளனர். அதையும் மீறி அனுமதித்தால் உரிமையாளர் முதலாவது குற்றவாளியாக சேர்க்கப்படுவார் என எச்சரித்துள்ளனர். இந்நிலையில், அருள்வாக்கு அன்னபூரணி அம்மா தலைமறைவாகிவிட்டார். அவரை தேடி பொலிஸார் வலைவிரித்துள்ளனர்.

புதுடெல்லி

# பிரதமர் மோடி இரங்கல்



நிறவெறிக்கு எதிராகப் போராடிய தென்னாப்பிரிக்கப் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு, நேற்று முன்தினம் (26) காலமானார். அவரது மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

தென்னாப்பிரிக்காவின் முதல் கறுப்பின அதிபராக நெல்சன் மண்டேலா பதவியேற்ற போது, 'வானவில் தேசம்' என்ற சொல்லாடலை உருவாக்கி, பிரபலப்படுத்தியவர் டுட்டு. இறக்கும் போது அவருக்கு வயது 90.

வெள்ளையர்களின் ஆட்சியை எதிர்த்து, அமைதி வழியில் போராடியதால், 1984 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. உலகம் முழுவதும், வழிகாட்டும் விளக்காக டெஸ்மண்ட் டுட்டு திகழ்ந்தவர்.

திருவொற்றியூர்

# கட்டடம் இடிந்து விழுந்ததில் 24 வீடுகள் தரைமட்டம்



சென்னை, திருவொற்றியூரில் உள்ள அரிவாக்கு குப்பத்தில் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கட்டடமொன்று நேற்று (27) இடிந்து விழுந்ததில், 24 வீடுகள் தரைமட்டமாகியுள்ளன.

காலையில் கட்டடத்தில் அதிர்வு இருந்ததால் மக்கள் வெளியேறிய நிலையில், இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஏற்கெனவே விரிசல் ஏற்பட்டிருந்ததை அறிந்து, மக்கள் வெளியேறியமையால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

தற்போது, கட்டட இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள தீயணைப்புத்துறை வீரர்கள், இடிபாடுகளில் யாரேனும் சிக்கி உள்ளனரா என்பது குறித்தும் தேடிவருகின்றனர்.



# மறைந்தார் மாணிக்க விநாயகம்

பிரபல பின்னணி பாடகர் மற்றும் நடிகர் மாணிக்க விநாயகம் உடல்நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது 78.

பிரபல தமிழ் திரைப்படப் பாடகரும் நடிகருமான மாணிக்க விநாயகம் கடந்த சில நாட்களாக உடல் நலக்குறைவால் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் (26) அவருக்கு மாரடைப்பு ஏற்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். இதனையடுத்து மறைந்த பாடகர் - நடிகர் மாணிக்க விநாயகம் அவர்களுக்கு திரையுலகினர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

விக்ரம் நடித்த 'தில்' என்ற திரைப்படத்தின் மூலம் பாடகராக அறிமுகமான மாணிக்க விநாயகம், அதன் பின்னர் பல திரைப்படங்களில் பாடல்கள் பாடியுள்ளார்.

அதேபோல் 'திருடா திருடி' 'பேரழகன்' 'திமிரு' உள்ளிட்ட ஒரு சில திரைப்படங்களில் குணச்சித்திர வேடங்களில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாளவிகா மோகனால் குழப்பம்



தளபதி விஜய் நடித்த 'மாஸ்டர்' திரைப்படத்தில் நாயகியாக நடித்த மாளவிகா மோகனனுக்கு திருமணம் ஆகி விட்டதா என்ற சந்தேகத்தை அவர் வெளியிட்டுள்ள புகைப்படம் ஒன்று கிளப்பியுள்ளது.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த 'பேட்ட' என்ற திரைப்படத்தின் மூலம் அறிமுகமாகி அதன் பின் தளபதி விஜய்யின் 'மாஸ்டர்' படத்தின் மூலம் பிரபலமானவர் மாளவிகா மோகனன்.

இவர் தற்போது தனுஷ் நடித்துள்ள 'மாறன்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இந்த படம் விரைவில் வெளியாக உள்ளது.

இந்த நிலையில் மாளவிகா பதிவு செய்துள்ள புதிய புகைப்படத்தில் அவரது காலில் மெட்டி இருப்பது போன்று உள்ளது. இதனை பார்த்த ரசிகர்கள் மாளவிகாவுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்று கேள்வியை எழுப்பி வருகின்றனர்.

இருப்பினும் புகைப்படத்துக்காக அவரது காலில் செய்யப்பட்ட அலங்காரத்தில் ஒரு பகுதிதான் அது என்றும், அது மெட்டி போல ரசிகர்களுக்கு தெரிகிறது என்றும் மாளவிகா மோகனன் தரப்பினர் கூறுகின்றனர்.

புதுடெல்லி

# சிறுவர்களுக்கு தடுப்பூசி



இந்தியாவில் 15 முதல் 18 வயது வரையிலான சிறார்களுக்கு ஜனவரி 3 ஆம் திகதி முதல் கொரோனா தடுப்பூசி செலுத்தப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

முன்களப் பணியாளர்களுக்கு ஜனவரி 10 ஆம் திகதி முதல் முன்னெச்சரிக்கை தவணை தடுப்பூசி செலுத்தப்படும். இந்த முன்னெச்சரிக்கை தவணையானது 60 வயதுக்கு மேற்பட்டோருக்கும் மருத்துவர்களின் அறிவுரையின்படி செலுத்தப்படவுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

வேகமாகப் பரவும் தன்மை கொண்ட ஒமிக்ரான் திரிபு கொரோனா வைரஸ் பரவல், இந்தியாவில் மெல்ல அதிகரித்து வரும் நிலையில், நாட்டு மக்களிடையே பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சென்னை

# தங்கம் எகிறியது

தொடர்ந்து குறைந்து வந்த நிலையில், தங்கத்தின் விலை திடீரென அதிகரித்தது. தங்கத்தின் விலை, கடந்த 3 மாதத்துக்கும் மேலாக ஏற்றம், இறக்கத்துடன் காணப்பட்டது.

கிறிஸ்மஸ் பண்டிகையைத் தொடர்ந்து, புத்தாண்டு, பொங்கல் என்று அடுத்தடுத்து பண்டிகை நாள்கள் வருகின்றன. இந்த நேரத்தில் தங்கத்தின் விலை குறைந்து வந்தது, பண்டிகை நேரத்தில் நகை வாங்கக் காத்திருப்பவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இந்தநிலையில், யாரும் எதிர்பார்க்காத வகையில் தங்கத்தின் விலை திடீரென அதிகரித்தது. ஒரு பவுண் தங்கம், இந்திய ரூபாயில் ரூ.36,416க்கு விற்கப்பட்டது. இது, நகை வாங்குவோரைச் சற்று கவலையடையச் செய்துள்ளது.

# மீண்டும் 'மைக்' மோகன்



தமிழ் சினிமாவில் 'மைக்' என்றாலே சட்டென்று நினைவுக்கு வருபவர் மோகன். 1977ஆம் ஆண்டு கமல் நடித்துள்ள "கோகிலா"என்ற திரைப்படம் மூலம் சினிமாவில் அறிமுகம் ஆனார்.

பின்னர் கதாநாயகனாக நடித்து வந்த இவரது திரைப்படங்களில் பாடல்கள் சூப்பர் ஹிட்டாக அமைந்திருந்தன. பெரும்பாலான திரைப்படங்களில் மைக் பிடித்து பாடும் கதாபாத்திரமாக அவருக்கு அமைந்தது.

இதனால் இவர் மைக் மோகன் என்று அழைக்கப்பட்டார். 1980-90-களில் தமிழ் சினிமாவில் இவருக்கென தனி இடம் இருந்தது. அதன்பின் நீண்ட காலமாக திரைப்படங்களில் நடிக்காமல் இருந்தார். தற்போது அவர் ரீஎன்ட்ரி கொடுக்க இருக்கிறார்.

விஜய் ஸ்ரீஜி இயக்கும் புதிய திரைப்படத்தில் மோகன் நாயகனாக நடிக்க உள்ளார். சில்வர் ஜூப்ளி ஸ்டார் என்று தலைப்பு வைக்கப்பட்டிருக்கிறது. பொங்கல் முடிந்ததும் படப்பிடிப்பு தொடங்கவுள்ளது.

புதுடெல்லி

# ஒமிக்ரான் தொற்று கூடியது



இந்தியா முழுவதும், ஒமிக்ரான் பரவல் அதிகரித்த வண்ணம் உள்ளது. பல மாநிலங்களில் இரவு நேர ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. பண்டிகை காலம் என்பதால், பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயற்படவேண்டுமென மத்திய, மாநில அரசுகள் வலியுறுத்தி வருகின்றன.

இதேபோல், கேரளாவில் 19 பேருக்கு புதிதாக தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியாவில் தற்போதைய நிலைவரப்படி ஒமிக்ரானால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 578 ஆக உயர்ந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

# "மூன்று முறை கடித்தது"



பிரபல பொலிவுட் நடிகர் சல்மான் கான் மஹாராஷ்டிராவின் மும்பையில், ராய்காட் மாவட்டம் பன்வெல் அருகே உள்ள அவரது பண்ணை வீட்டுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் சென்றிருந்தார். அங்கு அவரை ஒரு பாம்பு கடித்தது.

இதனை தொடர்ந்து அவர் மும்பையில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு பின்னர் வீடு திரும்பினார்.

இந்தநிலையில் இதுகுறித்து சல்மான் கான் அளித்த பேட்டியில் "ஒரு பாம்பு என் பண்ணை வீட்டில் நுழைந்தது. நான் அதை ஒரு குச்சியைப் பயன்படுத்தி வெளியே எடுத்தேன். படிப்படியாக அது என் கையை எட்டி என்னை மூன்று முறை கடித்தது.

அது ஒரு வகையான விஷப்பாம்பு. 6 மணி நேரம் மருத்துவமனையில் இருந்தேன்; இப்போது நலமாக இருக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கெதிரான ஆஷஸ்

# தொடரை கைப்பற்றுவதை நோக்கி அவுஸ்திரேலியா

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரைக் கைப்பற்றுவதை நோக்கி அவுஸ்திரேலியா பயணிக்கிறது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், மெல்பேணில் நேற்று முன்தினம் ஆரம்பித்த மூன்றாவது போட்டியில் நேற்றைய இரண்டாம் நாளை முதலாவது இனிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 61 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த அவுஸ்திரேலியா, குறிப்பிட்ட நேரத்தில் நேதன் லையன், மர்னுஸ் லபுஷைனை ஒலி றொபின்ஸன், மார்க் வூட்டிடம் இழந்தது.

பின்னர் சிறிது நேரத்தின் பின்னர் ஸ்டீவ் ஸ்மித்தை ஜேம்ஸ் அன்டர்சனிடம் இழந்த அவுஸ்திரேலியா, ட்ரெவிஸ் ஹெட் மற்றும் மார்க்கஸ் ஹரிஸை சிறிய இடைவெளிகளில் றொபின்ஸன், அன்டர்சனிடம் இழந்து தடுமாறியது. தொடர்ந்து வரிசையாக குறித்த இடைவேளைகளில் கமரொன் கிறீன், அலெக்ஸ் காரி, அணித்தலைவர் பற் கமின்ஸ், ஸ்கொட் போலண்ட் ஆகியோர் ஜக் லீச், பென் ஸ்டோக்ஸ், அன்டர்சன், வூட்டிடம் விழ, சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 267 ஓட்டங்களையே அவுஸ்திரேலியா பெற்றது.



இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, ஆரம்பத்திலேயே ஸக் குறோலி, டேவிட் மலானை அடுத்தடுத்து மிற்செல் ஸ்டார்க்கிடம் இழந்ததுடன், ஹசீப் ஹமீட் மற்றும் லீச்சை ஸ்கொட் போலண்டிடம் இழந்து நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 31 ஓட்டங்களைப் பெற்று 51 ஓட்டங்கள் பின்தங்கியுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

இங்கிலாந்து: 185/10 (துடுப்பாட்டம்: ஜோ றூட் 50, ஜொனி பெயார்ஸ்டோ 35, பென் ஸ்டோக்ஸ் 25, ஒலி றொபின்ஸன் 22 ஓட்டங்கள். பந்துவீச்சு: பற் கமின்ஸ் 3/36, நேதன் லையன் 3/36, மிற்செல் ஸ்டார்க் 2/54, கமரொன் கிறீன் 1/7, ஸ்கொட் போலண்ட் 1/48)

அவுஸ்திரேலியா: 267/10 (துடுப்பாட்டம்: மார்க்கஸ் ஹரிஸ் 76, டேவிட் வோணர் 38, ட்ரெவிஸ் ஹெட் 27, மிற்செல் ஸ்டார்க் 24, பற் கமின்ஸ் 21 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேம்ஸ் அன்டர்சன் 4/33, ஒலி றொபின்ஸன் 2/64, மார்க் வூட் 2/71, ஜக் லீச் 1/46, பென் ஸ்டோக்ஸ் 1/47)

இங்கிலாந்து: 31/4 (பந்துவீச்சு: ஸ்கொட் போலண்ட் 2/1, மிற்செல் ஸ்டார்க் 2/11)

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## லெய்செஸ்டரை வென்ற சிற்றி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-6 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர சிற்றி தோற்றது.

சிற்றி சார்பாக, ரஹீம் ஸ்டேர்லிங்க் இரண்டு கோல்களையும், கெவின் டி ப்ரூனே, றியாட் மஹ்ரேஸ், இல்கி குன்டோகன், அய்மரிக் லபோர்ட்டே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். லெய்செஸ்டர் சார்பாக, ஜேம்ஸ் மடின்ஸன், அடெமொலா லுக்மன், கெலச்சி லெகாஞ்சோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



தென்னாபிரிக்கா எதிர் இந்தியா முதலாவது டெஸ்ட்:

## மழையால் இரண்டாம் நாள் பாதிப்பு

தென்னாபிரிக்க, இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியானது மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், செஞ்சூரியனில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய இரண்டாம் நாளின் தேநீர் இடைவேளைக்கு முன்பதாக எவ்வித ஆட்டமும் இடம்பெற்றிருக்கவில்லை.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இந்தியா, தமது முதலாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில், லோகேஷ் ராகுல் 122, அஜின்கியா ரஹானே 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமலுள்ளனர். மாயங்க் அகர்வால் 60, அணித்தலைவர் விராட் கோலி 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தனர். வீழ்த்தப்பட்ட 3 விக்கெட்டுகளையும் லுங்கி என்கிடி வீழ்த்தியிருந்தார்.

# இலங்கை தேசிய கரப்பந்தாட்ட அணிகள் வென்றன

என். ஜெயரட்ணம்

இலங்கை தேசிய மகளிர் மற்றும் ஆண்கள் கரப்பந்தாட்ட அணிகள், பங்களாதேஷ் மிர்பூர் ஷஹீத் சுஹ்ராவர்தி கரபந்தாட்ட உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்ற மத்திய ஆசிய வலய நாடுகளுக்கு இடையிலான கரபந்தாட்ட போட்டிகளில் முறையே 3-0, 3-1 என்ற செட் கணக்கில் மகத்தான வெற்றிகளைப் பதிவு செய்தன.



தற்போது நடைபெற்று வரும் "பங்கபந்து கரபந்தாட்ட சவால் கிண்ண" ஆண்கள் பிரிவில் நேபாள அணியை எதிர்த்தாடிய இலங்கை அணி 25-18, 22-25, 25-14, 25-15 என்ற புள்ளிகளில் அடிப்படையில் 3-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது. இதன்போது இலங்கை அணியைச் சேர்ந்த மஹேல இந்திவர போட்டியின் நாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதேவேளை பெண்களுக்கான "பங்கமாத்தா கரபந்தாட்ட சவால் கினண்ன" போட்டியில் மாலைதீவுகள் பெண்கள் கரபந்தாட்ட அணியை எதிர்த்தாடிய இலங்கை பெண்கள் கரபந்தாட்ட அணி 25-15, 25-14, 25-13 என்ற நேர் செட் கணக்கில் வென்றது.

இப்போட்டிகளில் மத்திய ஆசிய வலய நாடுகளைச் சேர்ந்த பங்களாதேஷ், உஸ்பெக்கிஸ்தான், கிர்கிஸ்தான் உள்ளிட்ட அணிகளும் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் போட்டியிடுகின்றன.

ஆப்கானிஸ்தான்

ஆண்களின் துணையின்றி


# பெண்கள் பயணிக்கத் தடை

ஆப்கானிஸ்தானில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள தலிபான்கள், அங்கு பல்வேறு கடுமையான சட்டங்களை அமல்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் அச்சட்டங்களை மீறுவர்கள் மீது கடுமையான தண்டனைகளையும் விதித்து வருகின்றனர்.

இந்நிலையில், சுமார் 72 கிலோ மீற்றருக்கு மேல் பயணம் செய்யும் பெண்கள், நெருங்கிய ஆண் உறவினர்களின் துணை இல்லாமல் பயணம் செய்வதற்கு தலிபான்கள் தடைவித்துள்ளனர்.

மேலும், அவ்வாறு பயணம் செய்யும் பெண்கள், கண்டிப்பாக முறையாக ஹிஜாப் அணிய வேண்டும் எனவும், ஹிஜாப் அணியாத பெண்களை ஓட்டுநர்கள் டாக்ஸி உள்ளிட்ட வாகனங்களில் அனுமதிக்கக்கூடாது எனவும், பயணம் செய்யும் அனைவரும் வாகனங்களில் பாடல்கள் கேட்கக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





தென் ஆபிரிக்கா

இனவெறி எதிர்ப்பின் சின்னம்

## 'டெஸ்மண்ட்' காலமானார்

தென் ஆபிரிக்காவில் இனவெறி எதிர்ப்பின் சின்னமாகத் திகழ்ந்து, அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற டெஸ்மண்ட் டுட்டு, நேற்று முன்தினம் (26) காலமானார்.

இந்நிலையில் அவரது மறைவு குறித்து, அந்நாட்டின் ஜனாதிபதியான சிறில் ராமபோசா வெளியிட்டுள்ள அறிக்கையில், "நிறவெறியிலிருந்து தென் ஆபிரிக்காவை விடுவித்த மேலும் ஒருவரை நாம் இழந்துள்ளோம். டெஸ்மண்ட் டுட்டு யாருடனும் ஒப்பிடமுடியாத ஒரு தேச பக்தர். உழைக்காமல் கடவுளை மட்டும் நம்புவதால் எந்தப் பலனும் இல்லை என்ற பைபிள் கோட்பாட்டை, தனது வாழ்வால் நிரூபித்தவர்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

90 வயதான டெஸ்மண்ட் டுட்டு, நோபல் பரிசு பெற்று உயிரோடு இருந்த கடைசி தென் ஆபிரிக்கர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## 3 ஆண்டுகளாக மரத்துடன் குடும்பம் நடத்தி வரும் பெண்

பிரித்தானியாவைச் சேர்ந்த கேட் கன்னிங்ஹாம் என்பவர், 2019 ஆம் ஆண்டு பிரித்தானியாவின் மெர்சிசைடில் உள்ள செஃப்டனில் எல்டர் என்ற மரத்தை திருமணம் செய்து கொண்டார்.



இரண்டு குழந்தைகளுக்குத் தாயான இவர், இத்திருமணத்தின் பின்னர் தனது இரண்டாவது பெயரான குடும்பப் பெயரை, எல்டர் என்று மாற்றிக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இயற்கை ஆர்வலரான இவர், இது குறித்து பிரபல ஊடகமொன்றுக்கு செவ்வியளிக்கையில், "சட்டவிரோதமாக மரம் வெட்டுதல், காட்டை அழித்தல் போன்ற செயல்களுக்கு எதிராகவே, இம் முடிவைத் தான் எடுத்ததாகவும் வாரத்திற்கு ஐந்து முறை, குறித்த மரத்தைப் பார்த்துவிட்டுச் செல்வதாகவும் அம் மரத்துக்கும் தனக்கும் உள்ள உறவு மேலும் வலுவாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



லிபியா

லிபியாவில் 27 அகதிகளின்

## சடலங்கள் கரையொதுங்கின

லிபியாவின் மேற்குக் கடலோர நகரமான காம்ஸில் 25 ஆம் திகதி, 27 அகதிகளின் சடலங்கள் கரையொதுங்கியுள்ளன என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஐரோப்பாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த அகதிகள் படகு ஒன்று விபத்துக்குள்ளானதிலேயே குறித்த 27 பேரும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விபத்துக்குள்ளான படகில் இருந்து மூவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.



## அல்பம் சேதமடைந்ததால் இரண்டாம் திருமணம்



மலேசியாவைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது திருமண அல்பம் சேதமடைந்ததால் மீண்டும் திருமணம் செய்யத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ள வீடியோவொன்று பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

அண்மையில் மலேசியாவில் ஏற்பட்ட வெள்ளமொன்றில் குறித்த பெண்ணின் திருமண வீடியோ மற்றும் அல்பம் என்பன சேதமடைந்துள்ளது.

இந்நிலையில், தனது திருமண நிகழ்வு குறித்த பதிவுகளைச் சேகரிக்க, இரண்டாவது முறையாகவும் திருமணம் செய்யவுள்ளதாக அவர் தனது சமூக வலைத்தளப் பக்கமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வீடியோவானது, தற்போது வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## சிறுவர்களைக் குறிவைக்கும் ஒமிக்ரான்

தென் ஆபிரிக்காவில் கடந்த மாதம் கண்டறியப்பட்ட ஒமிக்ரான் தொற்றானது உலகளவில் மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது.

இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல நாடுகள் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் அமெரிக்காவில் ஒமிக்ரான் தொற்றுப் பரவல், நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இத்தொற்றால் சிறுவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதாகவும், கடந்த டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி முதல் 18 வயதிற்கு உட்பட்டவர்கள் இத்தொற்றால் பாதிக்கப்படுவது 4 மடங்காக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 28 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.